www.padippakam.com

# கதாசரண்

மிழில் படைப்பிலக்கிய மாத இதழ்

கை
புல்



ரப்ரல், 1992

விலை ரூ 3.

படிப்பகம்

www.padippakam.com

# ஐம்பொருள்

உண்மையில் நாம் யார்? எங்கிருந்து வருகிறோம்? என்னவாக முடிகிறோம்? எதனால் செய்யப் படுகிறோம்?

நான் ஒன்றும் ஞானியல்ல. ஞானியாகப் பாவித்துக்கொண்டு தத்துவ விசாரங்களைக் கொட்டியளப்பதற்காக இக்கேள்விகளை உங்களிடம் கேட்கவில்லை. உங்களை விடவும் ஒரு பாமரனாக, புதிர் போடும் இக்கேள்விகளுக்கு விடையுண்டா, நம்மால் யூகிக்கத்தான் முடியுமா என்று அதிசயப்பட்டுப்போய்க் கேட்கிறேன்.

இந்த உடலை மண்ணில் புதைக்கிறோம்; அல்லது எரிக்கிறோம். புதையுண்ட உடலும் சரி, சாம்பலும் சரி, சில காலத்திற்குப் பின் பிரித்தறிய முடியாதபடி மண்ணில் கலந்துவிடுகிறது உறவுள்ள பொருள்கள்தான் ஒன்றாய்க் கலக்கும். உடனடியாகக் கலக்க முடியாதவைகூட உறவுக்கான கிரியைக்குட்பட்டு, பின்னர் ஒன்றாகி விடுகின்றன. மண்ணோடு மண் கலக்கிறது; மண்ணோடு இந்த உடலும் கலக்கிறது. ஆக, உடலும் மண்ணும் ஒரு கிரியைக்குப் பிறகு ஒன்றுதான்.

பிடி மண்ணைப் பூமியிலிருந்து வெட்டியெடுத்துப் பாருங்கள். அது மண் என்பது தெளிவாய்த் தெரிகிறது. ஈரம் தெரிகிறது: சூடு இருக்கிறது; காற்று ஊடாடுகிறது. இவை நான்கும் எளிதில் புலனாகும் பொருள்கள். இம்மண்ணில் செடி வளர்கிறது. எனில், அதை வளர்க்கும் உயிர்ப்பொருள் ஊடுருவி இருக்கிறது என்றுதானே அர்த்தம்? மேலோட்டமாகப் புலனாகவில்லை. ஆனால் இருக்கிறது. அதுதான் ஆகாசமா? 'வெளி'யில் உலவும் அணுப்பொறிதான் உயிர் என்பதா! இந்த ஐந்தும் கூடி வினை புரிந்தால், ஒரு புல்லாக, பூண்டாக, மரமாக, விலங்காக, மனிதனாக உருப் பெறுகின்றன. மீண்டும் மண்ணிலேயே கரைகின்றன.

மண், நீர், தீ, காற்று, வெளி என்னும் இவ்வைந்தில் முதல் நான்கையும் சரியான விகிதத்தில் சேர்த்து, 'வெளி'யில் உலவும் அணுக்கருவை அதில் செருகி, விதையாகப் படைத்துவிட்டால் படைப்பு வேலை முடிந்தது. இவ்வேலையைச் செய்கிறவன் யார் என்பதுதான் இன்னும் புலப்படாமல் திகைத்துக் கொண்டிருக்கிறோம். விதை உருவாகிவிட்டது. முளைக்கத் துடிக்கிற கருவைச் சுமக்கும் விதை அது. ஐம்பொருள்களின் விகிதாசாரங்களுக்குத் தகுந்தாற்போல் வெவ்வேறு உயிர்கள்; இனங்கள்.

ஆக, நாம் இந்த மண்ணில்தான் ஐம்பொருள் கலவையாக இருக்கிறோம் எங்கிருந்தோ வருவதோ, எங்கேயோ போவதோ இல்லை. வருவதும் போவதும் என்றால், நம் பூமியின் எடை கூடவும் குறையவும் வேண்டுமே! அப்படியேதும் நிகழவில்லை.

ஒன்று புரிகிறது: நாம் எப்போதும் இந்த மண்ணில்தான் ஏதோ ஒரு வடிவில் இடைவிடாமல் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

படிப்பகம்

www.padippakam.com

# கவிதாசரண்

தமிழில் படைப்பிலக்கிய
மாத இதழ்
ஏப்ரல், 1992

மாதத்தின் முதல் வாரத்தில்
வெளி வருகிறது

தனி இதழ் விலை ரூ.3.
ஆண்டுச் சந்தா ரூ.36.
சந்தாவை M O. செய்க.

படைப்பில் உயிர்ப்பும் பார்வையில் தெளிவும் உள்ள எல்லா வகை இலக்கிய வெளிப்பாடுகளும் ஏற்றுக் கொள்ளப்படும்.

திறனாய்வுக்குப் புதிய நூல்கள் மட்டுமே ஏற்கப்படுகின்றன.

இதழை 580, T.H.Road, சென்னை-21இலிருந்து வெளியிடுபவரும் ஆசிரியரும்: கவிதாசரண். ஆல்வெல்பிரஸ், 31, T.K S. நகர் சென்னை-19இல் அச்சிடுபவர்: திருமதி கவிதாசரண்.

படைப்பாளர்களே தங்கள் படைப்புகளுக்குப் பொறுப்பேற்கிறார்கள்.

வெளியிடுவதற்கு ஏற்கப்பட்டவற்றைத் திருத்தவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை யுண்டு.

படைப்புகளை அனுப்ப மற்றும் தகவல் தொடர்புகளுக்கு:

ஆசிரியர், கவிதாசரண்,
31, டி.கே.எஸ். நகர்
சென்னை–600 019.

இதழ் பற்றிய உங்களின் மதிப்பீடுகளும் எதிர்பார்ப்புகளும் இதழின் தளத்தை விசாலப்படுத்தும். இதழுக்கான உங்களின் சந்தாவும் நட்பும் இதழின் நலத்தைச் செழுமைப்படுத்தும்.

PRESS & REGULATION OF BOOKS ACT
Registration of Newspapers (Central) Rules, 1957.
FORM IV (SEE RULE 8) Statement about ownership & other particulars about Newspaper KAVITHAASARAN

1. Place of Publication: 580, T.H. Road, Madras-21
2. Periodicity of its Publication: Monthly
3. Printer's Name: Mrs Kavithasaran
   Nationality: Indian
   Address: 31, T K S Nagar, Madras-19
4. Publisher's Name: Kavithaasaran
   Nationality: Indian
   Address: 31, T K S Nagar, Madras-19
5. Editor's Name: Kavithaasaran
   Nationality: Indian
   Address: 31, T K S Nagar, Madras-19
6. Name & address of individuals who own the Newspaper: 1) Kavithaasaran, 31, T K S Nagar, Madras-19 2) Mrs.Kavithasaran, 31, T K S Nagar, Madras-19

I, KAVITHAASARAN hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Dated: 30 3-1992

Signature of Publisher:
(Sd) KAVITHAASARAN



படிப்பகம்

www.padippakam.com

○ பல பழம் பெரும் எழுத்தாளர்களோடு, புதிய எழுத்தாளர்களும் எழுதியிருப்பது வரவேற்கத் தக்கது. 'தமிழ் உண்ணிகள்' சிந்தனையைத் தூண்டுகிறது 'விவாதம் இனிமேல்தான் தொடரும்' என்று போட்டிருக்கிறீர்கள். அதை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். பாப்லோ நெருடாவின் 'மது' என்.ஆர்.தாசனின் தமிழாக்கத்தில் மிகவும் மயக்குகிறது. 'வருக, இரவே!' நல்ல கவிதை. கடைசி இரண்டு கண்ணிகளும் நயமானவை; சிந்தனை விளக்கைத் தூண்டுபவை. —தி.க.சிவசங்கரன்

○ எனது 'அழகு மரம்' எனும் சிறிய படைப்பை வெளியிட்டு விலாசம் தந்த உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றி. என்னைப் போன்ற அறிமுக நண்பர்களுக்கு உங்களின் உதவி ஊக்கத்தைக் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. —ரங்கநாதன்

○ இதழ் ஐந்தை முதன் முதலாகக் கண்டு வியந்து போனேன். அச்சும் சரி, விசயங்களும் சரி, இலக்கியப் பித்தான என் அகோரப் பசிக்கு நல்ல விருந்து. முதல் நான்கு இதழ்களையும் படிக்காமல் விட்டோமே என்றும் வருந்துகிறேன். உங்களிடம் 'விசயம்' இருக்கிறது. ஆகவே நல்ல எதிர்காலமும் இருக்கிறது.

—திருமதி சுகந்தி நாராயணன்

## நேசம் பேசும் வாசகர்கள்



○ 'ஏதும் இனி மீதமில்லை' யில் கவிஞர் புதிய பட்டினத்தாராய் பவனி வருகிறார். 'காற்றின் நாயகன்' தொடர் இளைய தலைமுறைக்கு ஒரு நன்னூல். துறவியின் 'மூக்குத்திப் பூக்கள்' முத்துக்கள் தான். 'கவிஞர் வினா விடைகள்' கட்டுரையில் 'இலக்கியத் தரமான கேள்விகளுக்குப் பதில் அளிப்பவர் மேம்போக்கான இலக்கிய வல்லுநராக இருத்தல் கூடாது. கலை உணர்வுடன், தாம் வாழும் சூழல், சமுதாயம், இனம், நாடு, மொழி குறித்த கருத்துத் தெளிவு உடைவராக இருந்தாலே போதும்' எனும் கருத்து ஏற்புடைத்து. —கருமலைப் பழம் நீ

○ இந்தச் 'சகாரா'வின் ஒட்டகத்திற்கும் உலா வர, விழா எடுத்ததற்கு நன்றி. தொடரும் என் எழுத்திற்கு வளரும் வாய்ப்பளிப்பீர் என்று நம்புகிறேன். —'சகாரா'

○ என் முதல் கவிதையையும் சிறு கதையையும் வெளியிட்ட தங்களுக்கு என் நன்றியைச் சொல்கின்றேன். கவிதாசரண் வளர்ச்சிக்கு என்னால் இயன்ற அளவு துணை செய்வேன் என்பதை நீங்

படிப்பகம்

www.padippakam.com

கள் அறிவீர்ளாக. மார்ச் இதழில் சிறு கதை எழுதிய தோழர் அஷோக் ராஜா அவர்களின் எழுத்து நடை என்னை மிகவும் கவர்ந்திருக்கிறது. —சு.சுரேஷ் ரவி

(இதழுக்குப் பல வகைகளில் உதவலாம். தலையாய உதவி நிறைய நண்பர்ளைச் சந்தாதாரர்களாக்குவதும் இதழைப் பரப்புவதுமே.)

○ இளம் படைப்பாளர்களுக்குத் தாங்கள் அளிக்கும் ஆதரவு நம்பிக்கையூட்டுவதாக இருக்கிறது. எந்தப் படைப்பாளனும் தன் குறையைத் தானே அறிந்துகொள்வதில்லை. சிற்சில இடங்களில் என் சிறுகதையைச் செதுக்கியிருக்கும் அழகு மனதைக் கவர்வதாகவும், எனது குறைகளை நாகரிகமாகத் தெரிவிப்பதாகவும் இருக்கிறது. கவிதாசரணை எனது நண்பர்களுக்கு அறிமுகப் படுத்துவதன் மூலம் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புறேன். —அஷோக் ராஜா

(குறையென்று சொல்லும்படி ஏதும் இல்லை. மெருகூட்டல் அவசியம் என்னும் போது செதுக்குவதுண்டு, சிதைப்பதில்லை. இது அவசியம் உணரப்படுதல் ஆரோக்கியமாகும்)

○ படைப்பில் உயிர்ப்பும் பார்வையில் தெளிவும் உள்ள படைப்புகள் தொடர்ந்து வெளியாவது குறித்து சந்தோசம். 'முளையில் தெரியும் பயிர்' சாதாரணமாக (மிக) துவங்கி, பின் அட்டை உள் பகுதியில் காரசாரமாய் நிலையை எடுத்துரைக்கிறது. தேவனை மறுபடியும் பிறக்க வேண்டாமென மு.குணசேகரன் இப்படி நீட்டித்துக் கொண்டுபோய் சொல்லியிருக்க வேண்டாமோ? துறவியின் முத்திரை 'ஸ்விட்சைப் போடுகையில் தெரியும் குருட்டு தனத்தில்' மிளிருகிறது. அழகாகவும், இதழின் முன் பக்க ஓவியம் மற்ற (வந்த) இதழ்களை விட அழகாக அமைந்திருப்பது சிறப்பு. —வா.மு.கோமு

(இந்த அன்பர் நல்ல படைப்பாளரும் தேர்ந்த விமர்சகரும். 'நடுகல்' இதழாளர். இவரிடமிருந்து நிறைய எதிர்பார்க்கலாம். தூக்கலான அறிவு ஜீவித்தனத்தையும் பிறாண்டலாய் முகம் காட்டும் எதார்த்த வீச்சையும் எமக்காகச் சற்றே இளக்கிக்கொண்டு இலக்கியப் பயிர் வளர்க்க இவரிடம் எதிர்பார்க்கிறோம்.)

○ நீங்கள் எழுதிக் கொண்டு வரும் 'தமிழுண்ணிகள்' ஒரு புதிய பரிமானத்தைக் காட்டும் துணிச்சலான பார்வை. அதை விட நீங்கள் கையாளும் நடை வீரியம் மிகுந்த அழகிய கவிதை. 'தமிழுக்கு அமுதென்று பேர்' என்ற பாவேந்தரின் கவிதைக்கு இலக்கணமாய்த் திகழ்கிறது கவிதாசரண். —சூர்ய ப்ரகாஷ்

(விமர்சகனாய் இருப்பது படைப்பாளனாயிருப்பதை விடச் சிரமம் 'என்பதைத் தெளிவுறுத்தும் வகையில் கடிதங்கள் வந்தால் நலம்.

படிப்பகம்

www.padippakam.com

**சுடர்** ஏப்ரல் எட்டாம் நாள்.
என் அன்பு மகனே! அது உன் பிறந்த நாள்!
புலரும் காலைப் பொழுதும் நீயுமாய் வந்து,
என் கால்களில் விழுந்து வணங்குவாய்.
அந்தக் கணங்களில் உன்னை நான் வாழ்த்தியதை விட,
உன்னைப் பெற்றமைக்காக கர்வப்பட்டதே அதிகம்.
நான்கு ஆண்டுகள் ஓடிவிட்டன,
அந்தச் சுகம் எனக்கு நிரந்தரமாய் மறுக்கப்பட்டு.
என் கர்வம் எனது வாழ்த்தினை விழுங்கி விட்டது;
என் வரத்தைப் பறித்துக் கொண்டது.
பனிக்கட்டியாய் உருகி, நீர்த்தாரையாய்ப் பெருகும்
கண்ணீரே இப்போது என் சுகமாகித் தளும்புகிறது.
என் கண்மணியே!
இதைக் கற்பிக்கவா பதினேழு ஆண்டுகள் எனக்குப்
பிள்ளையாய்த் துணையிருந்தாய்!
இன்று என் கண்ணீரில் உப்பும் இல்லை; உவர்ப்பும் இல்லை.
முத்து முத்தாய்த் திரண்டொழுகி,
என் கடை வாய்க்கு உண்ணும் தேனாகிறது.
“அப்பா பாவம். அவரை விட்டுப் பிரிய மாட்டேன்,” என்று
உறுதி காட்டிய மகனல்லவா நீ!
இப்போது நான் பாவமாய் இல்லை, ஐயா.
உன் இழப்பு என் உயிர்க் குருத்தைச் சுட்டபோதே
மரணம் என் தோள் மீது கைபோட்டு நிற்பதை அறிந்தேன்.
இந்த அறிவுதான் இப்போது எனக்கு ஆறுதல், குழந்தாய்.
ஈர மண்ணில் புதையுண்ட இரும்புத் துண்டாய்க்
கனத்துக் கிடந்தேன் சில காலம்.
என் தோளைச் சுற்றிய கையின் தூண்டலால்
மின்னோட்டக்கம்பியைப்போல் முழுதாகச் செயல்படுகிறேன்.
ஒரு நாளில் மூன்று நாள் வாழ்க்கையைச் செலவிடுகிறேன்.
நீ விட்டுச் சென்ற சூனியத்தை வேறெப்படிச் செலவிடுவேன்!
என் செல்வமே! சுடரே!
நீ என் அருகில் இருந்தபோது,
நான் என் கோப தாபங்களையே அதிகம் நேசித்திருந்தேன்!
இன்றோ, இருபத்து நான்கு மணி நேரமும்
உன் நினைவென்னும் வாய் நீரைக் கூட்டி விழுங்கியே
உயிர் வளர்க்கிறேன்.
வாய் நீர் ஒருநாள் வற்றும்; வாழ்க்கையும் அத்தோடு முற்றும்.

படிப்பகம்

www.padippakam.com

என்னைத்தமிழ் அன்னைபெற்றாள்
ஏடெடுத்து வாழ்ந்திருப்பேன்;
இன்னுயிரைத் தோற்ற பின்னே
என் குழியில் பூத்திருப்பேன்.

கவிதாசரண்
தமிழில் படைப்பிலக்கிய மாத இதழ்

மலர் ஒன்று ஏப்ரல், 1992 இதழ் ஆறு

# இறைவா!

சிவன்என்று சுகமான பெயர் படைத்தாய், இறைவா!
புவனத்தில் சிவம் வாழ வழிவகுத்தாய்! சிவன்

அவனென்றும் இவனென்றும் ஆசையின் வெறியாலே
ஆயிரம் பெயர்சொல்லி அழைத்திடுவோம்; நீயோ
மௌனத்தின் மொழியாகி, மாதவப் பொருளாகி
மன்னுயிர் தனையாளும் மாமணிக் கொழுந்தானாய்!
சிவன்

நேசனை விடஉந்தன் நினைவெனும் உணர்வாலே
நீசர்கள் உன்னோடு நெருங்கிய உறவன்றோ!
ஈசனே! சிவனே! உன்திரு விளையாடல்
எங்கெங்கும் விளையாடப் பொங்குது சிவம் ஐயா!
சிவன்

படிப்பகம்

www.padippakam.com

—இந்த இதழின் ஒரு சிறு கதையும் இதில் சிக்கிக்கொண்டுவிட்டது—

**தமிழுண்ணிகள்** **விவாத சிந்தனை**

# வார்ப்பு

**/கவிதாசரண்/**

வெகு நேரம் நண்பரும் நானும் சுற்றுப்புறத்தைப் பார்த்துக் கொண்டு மௌனம் காத்தோம். இந்த மௌனம் இன்னொரு துருவலுக்கான ஆயத்தம் போல் பட்டது. இப்போது நண்பர் என்னைத் துருவிப் பார்த்தால் நன்றாயிருக்கும் போல் பட்டது.

''மாலைக் காற்று மிகவும் இதமாக இருக்கிறதல்லவா?'' என்று கேட்டு நண்பர் மௌனம் கலைத்தார். அவர் முக பாவம் மிகவும் இதமாக இருந்தது. கொஞ்சம் இறுக்கமாய் இருந்திருந் தால் எனக்கு இதமாயிருந்திருக்கும். இருப்பினும், ''ஆமாம்,'' என்றேன்.

''காற்றுக்கு ஆற்றும் சக்தி உண்டுதானே?'' என்றார்.

''புண்படுத்துவது மாதிரி ஏதாவது பேசிவிட்டேனா?'' என்று சற்று சங்கடத்தோடு கேட்டேன்.

''இல்லவே இல்லை,'' என்று உடனடியாக மறுத்தவர், என் கையைப் பற்றிக்கொண்டு, ''புண்படுத்தினால் அது அவ்வளவு நோவதில்லை. மேலும் மருந்து போட்டுக் கட்டிக் கொள்ளலாம். இது சிராய்ப்பு. மேல் தோல் மாத்திரம் வழண்டு கொள்ளும். அடிபட்ட இடம் இரத்தச் சிவப்பாயிருக்கும் ஆனால், ரத்தமே வராது. வெறும் வாய்க்காற்றுதான் அதற்கு மருந்து. ஊ.. ஊ... என்று ஊதிக்கொள்ள வேண்டியதுதான்,'' என்று சொல்லிக் கட கடவெனச் சிரித்தார். எனக்கும் சிரிப்பை அடக்க முடியவில்லை.

''இதில் ஒரு வேடிக்கையைப் பார்த்தீர்களா? நம் உடம்பில் ஏற்படும் சில சீர்கேடுகளுக்கு நம் உமிழ் நீர், வாய்க்காற்று, சிறு நீர், வியர்வை இவைகளே மருந்தாகி விடும் சாதாரண மருந்து என்று எண்ணிவிடாதீர்கள். மிகச் சக்தி வாய்ந்த மருந்து. உதா ரணமாக, எய்ட்ஸ் நோய்க்கு இன்னும் மருந்தே கண்டு பிடிக்க வில்லையல்லவா? ஆனல், நம் சிறுநீர்தான் அதற்குக் கை கண்ட மருந்து. இதை ஏன் மருத்துவர்கள் வெளிப்படுத்தவில்லை?''

''அப்படியா!''

''நம் உடம்பை நோய்க் கிடங்காகத்தான் பார்க்கப் பழகி யிருக்கிறோம்! உண்மையில் இது மகத்தான மருந்துக் கிடங்கு.

படிப்பகம்

www.padippakam.com

மனிதர்கள் அரிய பிறவிகளாயிற்றே! நோய்க் கிடங்காக்கிவிடும் வல்லமை இவர்களுக்கு மட்டுமே உண்டு. அது போகட்டும். நம் ஒருசில கோளாறுகளுக்கு வெளி மருந்தே தேவையில்லை.''

''தமிழ் பற்றிய நம் ஆதங்கங்களுக்கும் நாமேதான் மருந்தாக வேண்டும் வெளி மருந்து கிடையாது, இல்லையா?''

நண்பர் அதற்கொன்றும் பதில் சொல்லாதவராய் மேலும் தொடர்ந்தார்:

''இன்றைக்குப் பல கேள்விகளை எழுப்பியிருக்கிறீர்கள். இன்னும் பல கேள்விகள், தர்க்கங்கள் உங்கள் கை வசம் இருக்கும் என்றே நினைக்கிறேன். நீங்கள் மொழியாசிரியர் இல்லையென்றாலும் மொழியை அதிகம் நேசிக்கிறீர்கள்; மொழி வளம் பற்றி அதிகம் யோசிக்கிறீர்கள். ஆகவே கேட்கிறீர்கள்.''

''உங்களை வருத்தப் படுத்திவிடக் கூடாது.''

''படுத்தினால்தான் என்ன? நீங்கள் எனக்காக மட்டும் கேட்கவில்லையே? என்னை ஓர் ஊடகமாக்கிக் கொண்டீர்கள். இந்த ஊடகத்துக்கும் உறைக்கட்டும் என்று கேட்டீர்கள். இன்றைக்கு இப்படி மாட்டிக் கொண்டதில் கரும்பின் அடிக்கணுவைச் சுவைத்தது போன்ற ஓர் இனிமையே உண்டாகிறது.

''அப்படியா?''

''என்னையும் உங்களையும் உள்ளடக்கிய ஒரு பொதுமைக்காக இப்படி மாட்டிக் கொள்வதில், நம்மைப் பொதுமையின் பிரதிநிதியாக விசாலப் படுத்திக்கொண்டு பார்க்கிற பெருமை வந்து சேர்கிறது. ஆக்கபூர்வமாக நம்மைச் சிந்திக்க வைக்கிறது. ஆகவே இது ஓர் இனிமையான விஷயமாகி விடுகிறது.''

''எப்போதும் உங்களை ஒரு தெளிவான நீரோடை போல முகம் காட்டிக் கொள்கிறீர்களே! இதுதான் உங்களிடம் எனக்குப் பிடித்த விஷயம் பல சமயங்களில் நான் வியந்துகொள்வதுண்டு, கடைசியில் நீங்கள்தான் இந்தப் பிறவியில் எனக்குக் கிடைக்கப் போகும் ஒரே நண்பரோ என்று.''

நண்பர் சற்று அதிர்ந்துபோய்ப் பார்த்தார். பிறகு என் தோள்களை அழுத்தமாகப் பற்றி, ''நண்பரே, இன்னும் நான் உங்கள் நண்பனாய் முதிரவில்லை என்றா சொல்கிறீர்கள்?'' என்று மிகவும் கனிவோடு கேட்டார்.

''எனக்குப் புலப்படவில்லை.''

சிறிது நேரம் மௌனமானார். பிறகு பேசினார்:

''இன்னும்கூட உங்களுக்கொரு நண்பர் கிடைக்கவில்லை என்பதைக் கேட்க எனக்கொன்றும் அதிசயமாகப் படவில்லை.''

''மெய்யாகவா?''

பேச்சின் இலக்கு விலகுவது புரிந்தது. தடுக்க வேண்டாமே என்றும் மனதில் பட்டது. ஆகவே பேசாமல் இருந்தேன்.

''வாழ்க்கையில் எந்தப் பொருளுக்கும் ஒரு மாற்று உண்டல்

படிப்பகம்

www.padippakam.com

ல்வா?'' என்று கேட்டார்.

''ஆனால் உயிருக்கு மட்டும் இல்லை அல்லவா?''

''அதைத்தான் சொல்ல வருகிறேன். நீங்கள் எதையும் பொருளாகப் பார்ப்பதையே மறந்துபோய், ஒவ்வொன்றிலும் மாற்றே இல்லாத உயிரையே தேடிக்கொண்டு, ஒவ்வொன்றையும் உரைத்து உரைத்து, இழைத்து இழைத்துத் தேர்வு செய்ய முயல்வதே உங்கள் இயல்பாகி விட்டது.''

''அதற்கு என்னை நீங்கள் பொறுப்பாக்க முடியாது என்னுள் இயங்கும் 'நான்' ஒருவேளை பொறுப்பாகலாம்,'' என்றேன் சிரித்துக்கொண்டு. நண்பர் சிரிக்காமலேயே என்னை ஊடுருவிக் கொண்டிருந்தார்.

''தமிழைப் பற்றி அப்புறம் பேசலாமே. அது இருபத்து நான்கு மணி நேரமும் நம் உமிழ் நீரில் ஊறிக்கொண்டிருக்கிற விஷயம். இப்போது உங்களைப் பற்றிக் கொஞ்சம் பேசலாம் என்று தோன்றுகிறது,'' என்றார் நண்பர்

''பேசுங்களேன். எனக்கொன்றும் மறுப்பில்லை.''

''நீங்களும் ஒரு பள்ளியாசிரியராய் இருந்தவர். அதனால் அல்லவா தமிழாசிரியர்களைப் பற்றி இவ்வளவு தெளிவாகப் பேசுகிறீர்கள்! நீங்கள் மிகவும் கண்டிப்பான, தயவு தாட்சண்யம் பாராத, வகுப்புளை ஒரு நிமிஷமும் புறக்கணிக்காத, தெளிவாகவும் சரியாகவும் கற்பிக்கக் கற்றுக்கொண்டிருந்த ஆசிரியர். பையன்களை விளாசித் தள்ளுவதில் பயங்கரமானவர். பார்த்தீர்களா, உங்களுக்கு எவையெல்லாம் பெருமைகளோ, அவையே ஒரு வேற்றுப் பார்வையில் விமர்சனத்துக்குள்ளாகும் பலவீனங்களாகி விடுகின்றன! இதுதான் உங்கள் தளமோ? நீங்கள் ஒரு தடவை சொன்னீர்கள்: ஆசிரியன் பிள்ளைகளை அடிக்காமல் சொல்லித் தர வேண்டும். என்னால் முடியவில்லை. ஆகவே, தெரிந்தே செய்யும் தப்புக்குத் தண்டனை வேண்டாமா? அதனால் நான் பிளைகளைப் பிரம்பால் அடிப்பதில்லை. எப்போதும் கைகளால்தான். அவன் அனுபவிக்கும் வேதனையில் அரைக்கால் பங்காவது நான் அனுபவிக்க வேண்டாமா? அதுதான்.' இந்த வார்த்தைகளாலேயே உங்களை அடிக்கடி நினைத்துக் கொள்வேன். நினைவே ஓர் அதிசயம்போல் பூக்கும். அந்த அதிசயமும் ஓர் அதிர்ச்சிபோல ஒரு கணம் மினுக்கும். நுணுக்கமாக நான் அனுபவிக்கும் உணர்வு அது. உங்களை நினைக்கும் போதெல்லாம் உங்கள் குரல்தான் மணியோசை மாதிரி முன் வந்து ஒலிக்கும்.''

''யானை வரும் பின்னே; மணியோசை வரும் முன்னே என்பது போலவா?'' என்றேன் நகைத்துக்கொண்டே.

''உங்கள் குரல்தான் நீங்கள். உங்கள் பலம், பலவீனம் எல்லாம் அதுதான். நீங்கள் எப்போதாவது இதை உணர்ந்ததுண்டா?'' என்றார்.

படிப்பகம்

www.padippakam.com

"ஓரளவு."

"பிசிறே இல்லாத குரல்."

"அதனால்தான் வாழ்க்கையில் நிறைய பிசிறுகள் மண்டி விட்டன என்பதையும் உணர்ந்துகொண்டாயிற்று."

"கத்தி மாதிரி, வைரம் அறுத்த மாதிரி, பட்டுத் தெறித்த மாதிரி, கண்ணுக்குப் புலனாகாத மெல்லிய கதிர் ஊடறுத்துப் போவது மாதிரி. இந்தக் குரலில் சத்தியம் பேசலாம். சத்தியம் மெலிந்து, சத்தம் மிகுந்து போனால் கேட்பவர்கள் ஜென்மப் பகைகூட வளர்க்கலாம். இந்தக் குரலை எல்லோராலும் எல்லா நேரங்களிலும் சகித்துக் கொள்வதென்பது சற்றுச் சிரமமான தாய்த்தான் இருக்கும்."

"சரியாகவே கணித்திருக்கிறீர்கள்." என்றேன் சற்று ஆறுதலோடு. கடைசியில் என்னைப் படிக்க ஓர் அன்பர் கிடைத்தார் என்பதே என் ஆறுதலுக்கான காரணம்.

"பிரச்சினைகள் வரும்போது, தெரிந்தவர்கள் உங்களைத் தேடி வரலாம். உங்களின் தெளிவான வாதங்கள் அவற்றைத் தீர்த்து வைக்கலாம். தீர்ந்ததும் நீங்கள் கட்கத்தில் வைத்திருக்கும் காஞ்சிரங்காய்ச் செடியாகக் கருதப் படுகிறீர்கள். ஆகவே, உங்களிடமிருந்து விலகியிருக்கவே விரும்புகிறார்கள். ஒரு கணிப்பில் அவர்கள் நன்றியில்லாதவர்கள் போல் தோன்றினாலும், உண்மையில் உங்கள் குரலின் வைரக் கீறல்தான் அவர்களை ஒதுக்கி வைக்கிறது. அவர்களும உங்களைத் தூற்றத் துணிவ தில்லை என்பதை நான் அறிவேன்."

என்னையே நான் வெளிச்சத்தில் நிர்வாணப் படுத்திப் பார்த்துக் கொள்வது போல் கூசியது. எல்லாம் சரியாய் இருப்பது போல் தோன்றும் ஒரு விஷயத்தைச் சொல்லில் வரம்பு கட்டிப் பார்த்தால் எத்தனை அவநம்பிக்கை கொள்ளும்படியாய்த் தாக்கம் கொள்கிறது! ஆனால், அதுதான் உண்மை. இந்தக் கணிப்புகள் என்னில் எதையோ கரைத்து, என்னை ஓர் இளைத்த மனிதனாய் முன்னிறுத்துவது போல் உணர்ந்தேன். என் வருத்தங்கள் யாவும் இந்த வகையில்தான் சேகரிக்கப்பட்டு வந்துள்ளன என்பதும் தெள்ளெனப் புலப்பட்டது.

"நான் யார்மீதும் தனிப்பட்ட முறையில் கோபமோ, வருத்தமோ, ஆத்திரமோ கொள்வதில்லை. ஒரு கணத்துக்கு இந்த உணர்ச்சிகளால் உந்தப்பட்டாலும் அவற்றின் மீது செயல்படுவதில்லை. ஒரு குருவி தன் மீது விழுந்த நீர்த் திவலைகளைத் தன் சிறகின் சிலுப்பலால் கணத்தில் உதறி விடுபடுவதுபோல், நான் விடுபடவே விசைப்படுகிறேன். காரணம், என் செயல்களின் எதிர்விளைவுகள் என்னைச் சிறைப்படுத்தி விடுமோ என்னும் அச்சம்தான். சொந்தக் காரணங்களுக்காக என் சுதந்திரத்தைத்

படிப்பகம்

www.padippakam.com

தலையிட்டுக் கொண்டதே இல்லை. சில சமயங்களில் 'நழுவல் பேர்வழியோ நான்?' என்று நானே திகைத்துக் கொள்வேன். ஆனால், அப்படியல்ல. என் காரணமாக ஒரு வீட்டு வாசலின் கோலம் அழிக்கப் பட்டால், அந்த முற்றத்தை நான் மிதித்ததே இல்லை. சாதாரண காலங்களில் என்னை ஒரு தனித் தீவாகவே நிறுத்திக் கொள்கிறேன். என்னால் முடிந்த வரை வார்த்தைகளால் நன்மை கருதியே செயல்படுகிறேன். என்னை எத்தனையோ பேர் எத்தனையோ வழிகளில் சுண்டிப் பார்ப்பதுண்டு. ஒரு மறுமொழியாக நான் அவர்களைச் சுண்டிப் பார்த்தால், என் சுண்டு தலை தூக்கலாகக் கணிக்கப்படுகிறது என் குரல்தான் நான் என்று சொன்னீர்கள். என்னுள் என்ன இருக்கிறதோ அதுதானே என் குரலாகிறது! இதனால் எனக்கு நேர்ந்துள்ள இழப்புகள் அதிகம்தான். அதற்காக நான் வருந்துவதுண்டு ஆனால், உடைந்து போகவில்லை இந்த இழப்புகள் பொருள்களின் நஷ்டம் போலவே என்னைப் பாதிக்கின்றன. உணர்வின் நஷ்டமாக, உள்ளார்ந்த மரணமாக அவை இல்லை நான் நானாக இருப்பதுதான் உயிர்மூச்சான விஷயம். அதற்கு நஷ்டம் ஏற்பட்டால், நஷ்டத்திற்குச் சமரசம் பேசப்பட்டால், அன்றுதான் உடைந்து நொறுங்கிப் போவதாக இருக்கும்.''

நண்பர் மிகவும் ஆதரவோடு தழுவிக் கொள்வதே போன்ற இழையும் குரலில், ''நீங்கள் எப்படி இவ்வாறு வார்க்கப் பட்டீர்கள் என்று அனுமானிக்க முடிகிறதா, நண்பரே?'' என்றார்.

''அனுமானமே வேண்டாம். தெளிவான சித்திரமே உண்டு. நான் என் அம்மாவின் வார்ப்பு. என்னை என்னவாக இருக்க வேண்டி என் தாயார் வைராக்கியம் கொண்டார்களோ, அன்னவனாகவே வார்க்கப்பட்டேன்.''

''அவர்கள் இப்போது இல்லையல்லவா?''

''அவர்கள் போய் ஒன்பது ஆண்டுகள் முடிந்துவிட்டன. அவர்களுக்கு, ஒரே மகனாகிய நான் கொள்ளி போடவில்லை. அவர்கள் அடக்கம் செய்யப்பட்ட பின்தான் போய்ச் சேர்ந்தேன். நான் முப்பது நாள் குழந்தையாக இருந்த போது என் தந்தை காலமானார். குழந்தை என்பதால் அவருக்கும் நான் கொள்ளி போடவில்லை. என்னுடைய பெரியப்பாவின் பிள்ளை கொள்ளி போட்டான். அவனுடைய ஒரே மகன் என் அம்மாவுக்குக் கொள்ளி போட்டான். என்ன ஒற்றுமை பார்த்தீர்களா!''

''இதற்குத்தான் கொடுப்பினை என்பது.''

வினாடிகள் நழுவின. சிறிது நேரத்திற்குப் பின்னரே காற்றின் வருடலை உணர்ந்தேன். நண்பர் என்னைக் கலைக்க விரும்பாமல் உட்கார்ந்திருந்தார். நான் அவர் முகம் பார்த்து நகைத்தவுடன், ''அம்மாவைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம்,'' என்றார்.

படிப்பகம்

www.padippakam.com

''அம்மாவைப் பற்றி எனக்கு ஒரேயொரு வருத்தம் உண்டு.''

''என்ன!''

''மனிதர்களை அணுகும் விதத்தில் எதார்த்தமான பார்வை அளித்திருக்கலாம். நான் எவ்வளவோ சந்தோஷம் அனுபவித் திருப்பேன். 'மனிதர்கள் குறையும் நிறையும் கலந்த கலவை' என்னும் கண்ணோட்டத்துடன் நீங்கள் அவர்களை அணுகு கிறீர்கள். குறைகளை முதலிலேயே அங்கீகரித்துவிடுவதால் அவர்கள் நிறைவக் காட்டும்போது பாராட்டுகிறீர்கள்; மகிழ்கி றீர்கள். நானோ இதற்கு எதிர்மறை. 'மனிதர்கள் மேன்மை யானவர்கள்' என்பது என் கண்ணோட்டம். ஆகவே, ஒரு பாம ரத் தரிசனம் போலப் பார்க்கிறேன். நிறைகளே முன் அங்கீகா ரம் பெற்றிருப்பதால் குறைகளைக் காணும்போது வெறுத்துப் போகிறது. பாமரன் என்றால் 'அடச்சீ, போ,' என்று புறங்கை யால் ஒதுக்கிவிட்டுத் தன் வேலையைப் பார்ப்பான். நான் பாம ரன் அல்லவே! 'அறிவு ஜீவி' என்னும் அசுந்தையைக் கொஞ்சம் கொள்முதல் செய்து வைத்திருக்கிறேனே! அதனால் நொந்து போகிறேன். அறிவு பூர்வமாய் எல்லாம் விளங்கி என்ன பயன்? தொட்டில் பழக்கமாய் வந்த மனப்பழக்கம் விடவில்லையே!''

''எங்கள் கண்ணோட்டம் குட்டை நீர் போல ஒரு வரம்பில் முடிந்து விடுகிறது. ஆனால், உங்களுடையதோ மேன்மையான மனிதனுக்கான காத்திருப்பாக நீள்கிறதே?''

''தர்க்கம் செய்வதில் நீங்கள் வல்லவர். எனக்குச் சந்தே கமே வந்ததில்லை. ஒருவேளை உங்கள் வார்த்தை போலத்தான் நான் காத்திருப்பதும் வாழ்ந்திருபதும் நீள்கிறதோ என்னவோ.''

''சரி. அம்மாவைப் பற்றிச் சொல்லுங்கள்,'' என்றார்.

''அம்மாவை 'இவர் என்னைப் பெற்ற பெண்மணி' என்று இரண்டே சந்தர்ப்பங்களில்தான் நான் உணரும்படி நடந்து கொண்டார். ஒன்று, என் ஆறு வயதில் நடந்த சம்பவத்தில். ஏழெட்டு சிறுவர்களோடு நானும் சேர்ந்து புளிய மரத்தில் பழம் உதிர்ப்பதற்காக கல்லெறிந்துகொண்டிருந்த போது, நான் வீசிய கல் எகிறி விழுந்து, ஒரு சிறுவனின் தலையைப் பொத்துவிட்டது. அருகில் நின்றுகொண்டிருந்த அம்மா, அது நான் வீசிய கல்தான் என்பதைச் சொல்ல விடாமல் தடுத்துவிட்டார். அவரே அந்தப் பையனுக்கு மருந்து போட்டு, கட்டு கட்டி, எல்லாமும் செய்தார். ஆனாலும் என்னை அப்போதைக்குப் பேச விடாமல் அடக்கிய போது பெற்ற மனத்தின் தவிப்பை அந்தக் கண்களில் கண்டேன். மற்றொன்று, அவர்களின் கடைசி நாட்களின் நடந்தது தேகம் ஒடுங்கி விட்டது. இரவெல்லாம் இருமல். எழுந்து போய்க் கபத்தைத் துப்பி வர இயலாத தள்ளாமை. ஆகவே, ஒரு தகரக் குவளையில் மணலை நிரப்பி, அதில் துப்பிக்கொள்வார். மறு நாள் காலை சுத்தம் செய்து கொள்வார். அந்த நாட்களில், ஓர்

படிப்பகம்

www.padippakam.com

இரவில் பேய் மழை பிடித்துக்கொண்டது. நான் குடியிருந்த வாடகை வீட்டில் வெள்ளம் புகுந்து, தரையில் அடுக்கி வைக்கப் பட்டிருந்த புத்தகங்களையெல்லாம் நனைத்துவிட்டது. அந்த வெள்ள நீரில் அவர்களின் மணல்குவளை கவிழ்ந்து, அந்த இடம் அசுத்தமாகிவிட்டது. நான் மளமளவென்று இரண்டு கைகளாலும் நீரை இறைத்துவிட்டேன்; அவர்கள் சபத்தையும் சேர்த்துத்தான். 'அதில கை வைக்காதப்பா. நான் அள்ளிடறேன்' என்று பதறினார், எனக்கு அந்த நேர அவசரத்தில் ஒரு வித்தியாசமும் தெரியவில்லை. அவர்களை விலக்கிவிட்டு நானே சுத்தப் படுத்தினேன். அப்போது கலங்கித் தவித்த அவர் கண்களில் 'என் பிள்ளையல்லவா!' என்னும் பெருமிதம் கண்ணீராய்ப் பளபளத்தது.

"மற்றபடி, அவர்களை நான் அம்மாவாக உணரும் சந்தர்ப் பங்களே இல்லை. எந்த நேரமும் பிரம்பும் கையுமாய் இருக்கக் கூடிய கண்டிப்பு மிக்க ஒரு குருவின் தோரணை, சட்டாம்பிள் ளைத்தனம். என்னவோ, இந்த லோகத்தையே பரிபாலிக்க வந்த பரமேஸ்வரி என்கிற நினைப்பு; பிசிறில்லாத பேச்சு. உண்மையில் என்னை அவருடைய பிள்ளையாக வளர்ப்பதைவிடவும் அவருடைய கணவரின் பிள்ளையாகத்தான் வளர்த்தார். என் னுடைய அப்பாவின் மேல் அம்மாவுக்கு அப்படியொரு பக்தி. அம்மாவுக்குத் துளிக்கூடப் படிப்பு வாசனை கிடையாது. என் அப்பாவோ நிரம்பப் படித்தவர். சங்க இலக்கியம் முதலாக வள்ளலாரின் திருவருட்பா வரை எல்லா நூல்களையும், நான் எழுத்துக் கூட்டிப் படிக்கத் தொடங்கிய பருவத்திலேயே பரிச் சயம் பண்ணிக்கொள்ள வைத்துச் சென்றவர். என் வளர்ப்பில் அம்மா ஒரேயொரு விஷயத்தில் மட்டும்தான் கடைசி வரை தீர்மானிக்கத் தெரியாதவராய் இருந்தார். அப்பாவின் நூல் களை நான் படிக்க அனுமதிப்பதா, வேண்டாமா என்பது பற்றித்தான். அனுமதித்தால், அவரைப்போலவே சாமியாராகி விடுவேனோ என்ற பயம்; அனுமதிக்காவிட்டால், அவருடைய ஞானம் அவர் பிள்ளைக்கு மறுக்கப்பட்டு விடுமோ என்ற திகில். இந்தக் கண்ணாமூச்சியால் இலக்கியம் எனக்குத் தவிர்க்க முடியாத விஷயமாகிவிட்டது.

"அப்பா சாமியார்தான். அம்மாவையும் மூன்று பெண் குழந்தைகளையும் விட்டுவிட்டு, இலங்கைக்குச் சென்று பத்தாண்டுகள் சாமியாராக சஞ்சரித்தவர். அவரைப் பிடிவாதமாகத் திருப்பியழைத்துக் கொண்டு வந்த பின் ஓராண்டில் நான் பிறந்தேன். அம்மாவுக்கு அவர் ஒரு ஞானச் சுடராக விளங்கியிருக்க வேண்டும். அவருடைய வித்தல்லவோ நான்! அவரைப் பொருத்த வரை நான் 'தவம்' செய்து பெற்ற பிள்ளை. குலம் தழைக்க வேண்டும் என்பதற்காக, ஒரு சாமியாரை சம்சாரியாக்கி விட்ட 'பாவம்' அம்மாவை இரகசியமாய்ச் சுட்டிருக்கலாம். அம்மா

படிப்பகம்

www.padippakam.com

அசைவக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அப்பாவோ முரட்டுச் சைவம். அந்த வீட்டில் அசைவம் என்று சொன்னால் வாய் சுட்டுவிடும். ஆனாலும் அம்மாவை அசைவம் சாப்பிடுவதற் கென்றே அவர்கள் பிறந்தகத்திற்கு அவ்வப்போது அனுப்பி வைப்பாராம். இதுகூட அவரைப் புருஷன் என்னும் பந்தத்திற்கு மேலாக வைத்து அம்மாவை பக்தி செலுத்த வைத்திருக்கலாம்.

''நான் பிறப்பதற்குப் பத்து நாட்களுக்கு முன்பு, வாசலில் கம்பு காய வைத்திருந்தார்களாம். அம்மா ஏதோ கைவேலை யாய் இருக்க, அப்பா பத்திரகிரியார் பாடலைப் படித்துக்கொண் டிருந்தாராம். அப்போது, ஒரு ஆடு உள்ளே நுழைந்து கம்பைத் தின்றதாம். அதைப் பார்த்து அம்மா உடனே எழ முடியாமல் பதை பதைப்புடன், 'ஆடுங்க ஆடுங்க' என்று கத்தினார்களாம். அப்பா உடனே எழுந்து ஆட்டைத் துரத்தாமல், 'தாயார் நீ சொல்வதை நான் தட்டலாமா? இதோ ஆடினேன்,' என்று ஆடி னாராம், 'அந்த ஞானப் பழம் புள்ளதாச்சி பேச்சைத் தட்டாத புருஷரா பாவிச்சு ஒரு நிமிஷம் ஆடினார்டா. நீ என் வயித் தையே அம்பலங் கட்டி ஆடினமாதிரி இருந்தது. ஆனா, அந்த ஞானக் கூத்து நாப்பதாவது நாள் அடங்கிப் போச்சே!' சர்வ லோகமும் அந்த அம்மாளின் சோகத்தைக் காது கொடுத்துக் கேட்பதைப்போல அந்தச் சின்ன வயதிலேயே நான் உணர்ந்த துண்டு.''

சிறு மூச்சுகூட ஒரு தடையாய்த் தோன்றுமோ என்னும் எச் சரிக்கை உணர்வோடு நண்பர் மௌனம் காத்தார். நான்தான் இயல்பாக அவரைப் பார்த்து நகைத்து விட்டுத் தொடர்ந்தேன்:

''அம்மாவின் வைராக்கியத்தால் குழந்தைப் பருவத்தின் சில சுகங்களை நான் இழந்திருக்கலாம். எனக்குத் தெரியவில்லை. அப்பா காலத்திற்குப் பின் அம்மாவும் பிறந்தகம்போய் அசைவம் சாப்பிடுவதை நிறுத்திவிட்டார். என்னை ஒரு முரட்டுச் சைவ னாகவே வளர்த்தார். ஆனால், நானும் என் பங்குக்குக் குறை வைக்காமல், இறுதிக் காலத்தில் அவ்வப்போது அசைவப் பண் டங்களை உணவகங்களிலிருந்து வாங்கி வந்து கொடுப்பதுண்டு. அவர்கள் சாப்பிடுவதைப் பார்த்துக் கொண்டிருந்து பழகிய தில் அசைவ உணவு கொள்வோர் நடுவே அமர்ந்திருக்கக்கூடிய சகிப்புத் தன்மை நாளடைவில் வந்துவிட்டது.''

''அப்பாவின் பிள்ளையல்லவா நீங்கள்?'' என்றார் நண்பர்.

''அப்படியாக நான் வாழ்த்தப் பட்டேனா, சபிக்கப் பட் டேனா என்பதை யோசிக்கத் தோன்றியதே இல்லை. அம்மாவை நினைக்க பிரமிப்பாகவே உள்ளது. ஆயிரத்து இருநூறு தலைக் கட்டுள்ள ஒரு பேரூரில், இலங்கை, சிங்கப்பூர் சீமான்கள் நடுவே, என் வயதில் நான்தான் முதல் பட்டதாரி. ஒரு சின்ன வீடும், ஒரு ஹெக்டேர் வானம் பார்த்த பூமியும் வைத்திருந்த ஓர் ஏழை

படிப்பகம்

www.padippakam.com

விதவைத் தாயின் சாதனை அது. என்னை அவர்கள் முதன்மைப் படுத்தியதும் முன்னிலைப் படுத்தியதும் அசாதாரண விஷயங்கள்தாம். எனக்கு ஏழு வயது ஆகும் போது ஒரு நிகழ்ச்சி நடந்தது. எங்கள் நிலத்தின் பயிர் வேலைகள் அனைத்தும் என் அம்மாவும் அக்காள்களுமே செய்து விடுவார்கள். அம்மா அதிகாலை நாலரை மணிக்கே எழுந்து வாசல் பெருக்கி, குப்பையை ஒரு கூடையில் அள்ளிச் சுமந்துகொண்டு எங்கள் நிலத்துக்குக் கிளம்பி விடுவார். கூடையில் குப்பை ஒன்றும் இருக்காது. கூடை மட்டும் பெரிதாயிருக்கும். ஒவ்வொரு நாளும் நான்தான் அந்த இருட்டில் துணை போக வேண்டும். எதற்குத் தெரியுமா? அதிகாலையில் வயல்களுக்கு நீர் இறைக்க ஓட்டிச் செல்லப்படும் எருதுகள் வழி நெடுகச் சாணம் போட்டுச் செல்லும். அதையெல்லாம் எடுத்துக் கொடுப்பதற்குத்தான் நான். எங்கள் நிலம் சென்றடைவதற்குள் கூடை நிரம்பிவிடும். எங்கள் நிலத்திற்கு எருவிட்டு வளம் சேர்த்தது இப்படித்தான். ஒரு மார்கழி மாத விடியற்காலையில் அம்மா என்னை எழுப்பினார்கள். குளிரின் கடுமையால் எழ மனமின்றிப் போர்வைக்குள் சுருண்டுகொண்டேன். அம்மாவும் விடாமல், போர்வையை விலக்கி விட்டு, 'எழுந்திருடா,' என்றார்கள். நான் குழந்தை வயதின் எரிச்சலோடு, 'என்னம்மா, சீ... தூங்க விடமாட்டேங்கிற,' என்றேன். உடனே அம்மா எழுந்து விட்டார்கள். 'எலே, சீ...ன்னா சொன்னே? நான் நாயாடா? நீ நாய்க்குப் பிறந்தவனாடா?' என்று தோரணையோடு கேட்டதும் வாரியடித்துக்கொண்டு எழுந்துவிட்டேன். 'நான் எங்கேம்மா அப்படிச் சொன்னேன்? குளுருதுன்னுதானே சொன்னேன். தோப்புக்கரணம் போடறேம்மா. சீ...யின்னா நாயின்னு எனக்குத் தெரியாது,' என்று மன்றாடினேன். 'ஏன் புள்ளையைப் போட்டு இப்படி வதைக்கிறே?' என்று என் சகோதரிகள் பரிந்து வந்தார்கள். 'கம்மனாட்டி வளர்த்தது கழுதக் குட்டியா போயிடக் கூடாதேன்னுதான் வதைக்கிறேன், தெரியிலே?' என்று ஒரு சூட்டுக்கோல் இழுப்பு. அன்று எனக்குக் குளிரே உறைக்கவில்லை.

''இவ்வாறுதான் சொல்லுக்குப் பன்முகப் பொருளும் பொருளோடு உயிரும் உண்டு என்பதையும், கத்தியைப் போலச் சொற்களைக் கவனமாகக் கையாள வேண்டும் என்பதையும் கற்றுக்கொண்டேன் அம்மா சொல்வார்கள்: 'ஒப்புக்குப் பேசுறதும் மெப்புக்குப் பேசுறதும் உத்தமனுக்கு ஒவ்வாதுடா. ஆண்டவன் நமக்குப் பேச்சைக் கொடுத்தது அவன் சேவனேன்னு இருக்கத்தான்னு சாமியார் சொல்வாருடா. அதனால, வார்த்தையை எப்பவும் அளந்து பேசு. உள்ளதைப் பேசு. நல்லதாப் பேசு. நாம விடுற மூச்சு அசுத்தப்படுத்துற காத்தை நம்ம பேச்சு சுத்தப் படுத்தணும் அதுக்குத்தான் பேச்சு.' ''

விவாதம் அடுத்த இதழில்

படிப்பகம்

www.padippakam.com

**என்.ஆர். தாசன்**

# அவள் அறியாள்



இதை எதிர்பார்க்கவில்லை.

பல்லக்கில் ஏறும்போது இருந்த ஆனந்தப் பெருக்கு இப்போது இல்லை.

''யுத்தத்தின் ரூபம் இதுவா?'' என சீதாப்பிராட்டி பிரமித்துப் போனாள்.

விலக்கிய திரை திரும்பவும் விழுந்தது. அவள் கண்களை மூடிக்கொண்டாள்.

ஆயினுனும் அந்தக் கோரக் காட்சிகள் நினைவில் பூதாகாரமாய்த் தெரிந்தன.

ஆயிரமாயிரமாய்ப் பிணங்கள்... பிரேத மலைகள்... நொறுங்கிப் போன கபாலக் குவியல்கள்... நிணக்காடுகள்... ஆறாய்ப் பெருக்கெடுத்த ரத்தம்... இலங்காபுரியே மயானமாக மாறிவிட்டதோ என நம்ப வைப்பதற்கான சாட்சியங்கள் எங்கும் திசை பேதமின்றித் தெரிந்தன.

''ஐயோ; இவ்வளவு நாசங்களா? சீதாதேவி கண்களைத் துடைத்துக் கொண்டாள். துடைக்கத் துடைக்க ஈரம் சுரந்து வந்தது.

பிண வாடை அடிவயிற்றைப் புரட்டி எடுத்தது. சீதை மூக்கைப் பொத்திக் கொண்டாள். அதுவே குற்றம் மாதிரி உறுத்தியது.

''இந்தப் படுகொலைகளுக்கு... பயங்கர அழிவுகளுக்கு... ஒரு விதத்தில் காரணம் நான்தானே. பின் மூக்கைப் பொத்திக் கொள்ள எனக்கென்ன தகுதி...?''

மூக்கிலிருந்து அவளின் கை விலகியது. திரும்பவும் திரை நீக்கிப் பார்த்தாள்.

வானரர்களின் பிணங்களும் அரக்கர்களின் பிணங்களும் ஒன்றோடொன்று கலந்து கிடந்தன. அது வாழ்க்கையின் விசித்திரங்களை விளக்குவதாக இருந்தது.

''ஜீவித காலத்தில் பிரிந்து கிடந்தவர்கள் மரண கத்ளதில் என்னமாய் சங்கமித்துக் கிடக்கிறார்கள்!...''

பல்லக்கில் உள்ள ஆசனம் அன்னத் தூவியினாலாகி இருந்தும் முள்ளாகக் குத்தியது. நெருப்புக் கங்கு சுட்டது மாதிரியும் இருந்தது.

தன் சரீரம் மெல்ல நடுங்குவதை ஜானகி உணர்ந்தாள்.

எல்லாவற்றையும் பிடித்துக் குலுக்கிய சூறாவளி உள்ளேயா, வெளியேயா?

சிக்கிய சருகாய் வதை படுவது எதுவோ?

படிப்பகம்

www.padippakam.com

பிடித்து இழுத்து இழுத்து வைக்க, பிய்த்துக் கொண்டு போவது என்னவோ?

''ஓ... என் மனம்தானா?

தான் கணவனிடமிருந்து பிரிந்ததற்காக எத்தனை ஸ்திரீகள் தம் கணவன்மார்களிடமிருந்து பிரிக்கப்பட்டு விட்டார்கள்!

கணவனோடு இதோ அவள் சேர்ந்துகொள்ளப் போகிறாள்.

ஆனால் இவர்கள்?... சேர முடியுமா?... இவை நித்தியப் பிரிவுகள்... அந்திமப் பிரிவுகள்.

தனது பிரிவிற்கு ஒந்ராவணன் காரணமாயிருந்தான்.

இவர்கள் பிரிவிற்கு எந்த ராவணர்களும் காரணம் இல்லையே.

பின் இந்த அந்திமப் பிரிவுகளை நியாயப்படுத்த முடியுமோ?

அலைந்து திரிந்த நினைவுகள் திரும்பி வந்து நெஞ்சில் மையமிட்டன.

''என்னால் இதைத் தவிர்த்திருக்க முடியும்...''

அதற்கு எப்படிப்பட்ட சந்தர்ப்பம் கிடைத்தது!

வாயு புத்திரனான அனுமனே முன் வந்து தந்தானே.

''தாயே, என் தோளில் அமர்ந்து கொள்ளுங்கள். ஆகாய வழியே பறந்து போய் கிட்கிந்தையில் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியிடம் சேர்ப்பித்து விடுகிறேன்...''

அதை மறுத்ததற்கு என்னென்னவோ காரணங்களை அல்லவா தேடிப் பொறுக்க வேண்டி இருந்தது. அவை ஒவ்வொன்றும் தர்க்கத்தின் இரும்புக் கைகள் பட்டதும் நொறுங்கிப் போகவில்லையா?

''கற்புக் கனலியான என்னை வேறு ஆடவன் ஸ்பரிசிக்கலாமோ?''

தன்னை 'தாய்' என அனுமன் அழைக்கவில்லையா?

''குழந்தையின் ஸ்பரிசத்தில் ஆண் - பெண் பேதமுண்டோ?... குழந்தையின் தீண்டலுக்கு விகற்பம் கற்பித்த நான் எப்படிக் கற்புக் கனலியாவேன்?'' சுய தேடலில் வெளிப்பட்ட தனது பிம்பம் ரம்மியமானதாகத் தெரியவில்லை.

''கற்புக்கனலி...'' ஜனகபுத்திரி சிரித்துக் கொண்டாள்,

''சந்தேகி அற்ப சந்தேகி.''

அனுமன் வாயில் கை வைத்துக் கெஞ்சினானே. அவன் முகத்தில் அறைவது போல் நான் பதில் சொல்லவில்லையா?

''முறையல்ல; இதுவும் ஒரு வகையில் திருடே.''

ராவணன் தன்னைத் திருடித்தானே சென்றான்?

அதற்குச் சரியான பதில் இன்னொரு திருடுதானே?

செயலுக்கு ஏற்பத்தானே எதிர்ச் செயலும் இருக்க முடியும்?

அதற்கு மேல் இது எப்படித் திருடாகும்?

அபகரித்ததைத் தேடித் திரும்பப் பெறுவது திருடல்லவே.

வேறு ஒன்றையும் அவன் சொன்னானே.

''என் சொல்லினாலேயே

படிப்பகம்

www.padippakam.com

இலங்கையை சுட்டு எரித்து விட முடியும். ஆனால் தூயவனின் வில்லிற்கு அது மாசில்லையா? என் நாயகன் வந்து என்னை சிறை மீட்டுச் செல்ல வேண்டும். அதுதான் எனக்குப் பெருமை; கௌரவம். மேலும் என் நாயகன் மகா வீரன்; வேற்று ஆள் அதுவும் வானர வேந்தன் மீட்டுச் சென்றால் பதியின் வீரத்திற்கு அது அழகாகுமோ? இல்லை; இழுக்கு... பேரவமானம்...''

அந்தப் பெருமை மோகம் எவ்வளவு நாசத்தை உண்டாக்கி விட்டது என்பதைக் கண்ணெதிரில் பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

காற்று திசை மாற்றிக் கொண்டது.

மறு புக்கத்தைக் காணத் துடிக்கும் தீவிரத் தேடல் முயற்சிகள் ..

மகா பராக்கிரமசாலியாயிற்றே ராமன்.

அவனது பாணங்கள் வரம் வாங்கி வந்தவை இல்லையா?

அனுமன் செய்வதாகக் கூறிய காரியத்தை ராமனால் செய்ய முடியாதா?

இது ரகசியமாக, நான்கு பேர்களுக்குக் கூடத் தெரியாமல் போய்விடும்.

ஊரைக் கூட்டி, உலகைக் கூட்டி வேடிக்கை காட்ட வேண்டும் என்பதுதான் ராமனது ஆசையா?

''புகழுக்கும். பெருமைக்கும் அலைகிற சராசரி மனிதன்தானா என் தலைவன்?''

நினைப்பே குற்றமாகி விட்டது.

ராம பாணம் அற்புத சாகசங்களை நிகழ்த்தியதாயிற்றே.

தாடகை... திரிசிரா... தூடணன்... கரன்... மாரீசன்... வாலி...

பட்டியல் அல்ல; வீரசாசனம்.

கிட்கிந்தையில் இருந்து கொண்டே இந்தப் பட்டியலில் ராவணனைச் சேர்ப்பதற்கு எது தடையாயிற்று?

அனுமன், சுக்ரீவன், அங்கதன், ஜாம்பவான் போன்ற பராக்கிரமசாலிகள் பக்கத் துணையாய் இருக்கிறார்களே.

மறைந்து கொல்வது யுத்த சாகசம்தானே.

ராவணவதம் இப்படி நடந்திருந்தால் இந்தப் பேரழிவு விலக்கப்பட்டிருக்குமே.

''ராமன் நியாயவான்; தர்மவான். முறையற்றவற்றை, அதர்ம வழியை அவன் கடைப் பிடிப்பானோ?''

எங்கெங்கிருந்தோ ஆயிரம் குரல்கள்...

சீதையின் உதட்டோரம் புன்னகை, சுழியாய் வடிவு கொண்டது,

அசோகவனம் வந்து, அன்றொரு நாள் தசமுகன் ராவணன் பரிகசித்தானே.

''ராமனின் நாயகியே, கேள்... வாலிவதம்... புரிகிறதா?... முறையான வழியைத் தான் உன் ராமன் கடைப்பிடித் தானா?... மூச்சுக்கு முப்பது முறை அதர்மம் என்கிறாயே. வாலியைக் கேட்டால் தெரியும்.

படிப்பகம்

www.padippakam.com

ராமன் அதர்மன்... நீ அதர்ம னின் தேவி.''

தன்னைத் திக்குமுக்காட வைத்தானே ராவணன்.

தன்னால் என்ன பதில் சொல்ல முடிந்தது?

வாலியே ராமனிடம் கேட்டதாக தனக்குச் சொல்லப்பட வில்லையா?

''இலங்கையர் கோன் செய்ததை முறையற்றது என்ற ராமா, நீ செய்தது முறையா, தர்மமா, என்ற கேள்விக்கு என் நாதனால் என்ன பதில் சொல்லி இருக்க முடியும்?''

பழி வந்துவிட்டது. ஒரு முறை செய்தால் என்ன, நூறு முறை செய்தால் என்ன?

பழியைத் தீர்மானிப்பது எண்ணிக்கை அல்லவே.

வாலி வதத்தில் கடைப் பிடித்த முறையை ராவண வதத்தில் ஏன் கடைப்பிடித் திருக்கக் கூடாது?

''இந்த சர்வநாசம் என் நாயகர் விரும்பிய விதத்தில் தான் நடந்தேறியதோ?''

யோசனைகள் வெளிச்சம் கொண்டு வந்தன.

நம்புவது கடினமாக இருந்தது.

ஆனால் உண்மைகள் உண் மைகள்தானே.

ராமன் புகழ் தேடி அலை பவனோ?

அவதார புருஷனாகத் தன்னை நம்ப வைக்க கூட்டம் வேண்டாமோ?

மகத்தான யுத்தமும், மகா அழிவும் இதற்குத் தேவைத் தானே.

வெளிக்கு என்னென்னமோ மாதிரி ராமன் தெரிந்தாலும் அடிப்படையில் அவன் ராஜ குலத்தவன்.

ராஜ்யத்தோடு தொடர்பு கொண்டவனுக்கு எது வேண் டும்?

கூட்டம்... கூட்டம்... கும் பல்... கும்பல்...

இதை நம்பச் செய்ய வேண் டும்; திருப்த்திப்படுத்த வேண் டும்.

இதுவே ராஜநீதி; ராஜதந் திரம்.

ராஜாராமன் வேறு எப்படி நடந்து கொள்ள முடியும்?

கூட்டத்தைத் தன் பக்கம் வைத்துக் கொள்ளவும், கூட் டத்தை பிரமிக்கச் செய்யவும், மகா யுத்தங்களை அவன் செய் வான்.

நாசங்கள் அவனுக்கு ஒரு பொருட்டல்ல.

''என் நாயகர் இப்படிப் பட்டவரா? ஆதர்ஷ புருஷர் அவதார புருஷர் என்பதெல் லாம்?..''

சீதாப்பிராட்டியின் நெஞ் சில் ஆயிரமாயிரம் கேள்விகள்.

நிதர்சனங்களின் தரிசனத் தில் கேள்விகள் நாணிக் கூசி ஒடுங்கிப் போகின்றன.

தன்னை அழைத்துக் கொண்டு முன் செல்லும் விபீஷ ணனிடம் இதைப் பற்றியெல் லாம் நிறையக் கேட்கத் தோன் றுகிறது சீதைக்கு.

அவனோ தலை குனிந்தபடி

படிப்பகம்

www.padippakam.com

செல்கிறான்.

இலங்காபுரிக்கு அரசனான சந்தோஷம் அவன் முகத்தில் விளக்கேற்றி வைக்கவில்லையே.

மனக்குழப்பத்தின் கசடுகள் அல்லவா பூசிக்கிடக்கின்றன.

''ஏன்? ... ஏன்? ...''

தனது நினைவையொட்டி ஏதேதோ நிகழப் போவதை இவன் முன்னறிந்ததால் ஏற்பட்ட கலக்கமா?

அவள் அறியாள்.

புகழுக்கும், பெருமைக்கும் ஆசைப்பட்டு கூட்டத்தைத் திருப்திப் படுத்த எதையும் செய்யத் தயங்காத ராஜகுல ராமன், ராஜாராமன் தன் மனைவியையும் விட்டு வைக்க மாட்டான் என்பதை இவன் அறிந்து கொண்டதால் ஏற்பட்ட சோகமா?

அவள் அறியாள்.

கும்பலின் ஆரவாரத்தில் காணும் சுகத்திற்கு இடையூறு நேரும் போது, உயிருக்குயிரான எந்த உறவும் ராமனுக்கு ஒரு பொருட்டே அல்ல என்பதை இவன் அறிந்து கொண்டதால் ஏற்பட்ட துக்கமா?

அவள் அறியாள்.

ஆனால் இன்னும் சிறிது நாழிகை கழியட்டும்...

எல்லாவற்றையும் அவளே அறிந்து கொள்வாள்.

சீதையின் பிரவேசத்தை எதிர் நோக்கி அக்னிக்குண்டம் காத்திருக்கிறது.... ○



## நூல்நலம்

### தாசன் கதைகள்

என்.ஆர். தாசன்

பக்கங்கள்: 144 விலை ரூ.18

பத்மா பதிப்பகம், 53, என். ஜி.ஓ. காலனி, குரோம்பேட்டை சென்னை-600044.

இந்நூலில் 14 கதைச்சித்திரங்களும் 10 சிறு உருவகங்களும் அடங்கியுள்ளன. துரும்பைக் கூடத் தூணாய்ச் சித்தரிக்கத் தெரிந்த தலை சிறந்த கலைஞனாமலேயே இதில் ஒன்றும் இல்லை என்று விட்ட விஷயத்தைக் கூட ஓர் அற்புதப் படைப்பாக்கிக் காட்டும் சித்து வேலை கற்றவர் இதன் நூலாசிரியர் என். ஆர். தாசன் அவர்கள். பாமரக் கண்களுக்குச் சூனியமாய்த் தெரியும் இடத்தில் தாசனின் காஸ்மிக் கண்களுக்கு அற்புதக் கோலமே புலப்படும். நூலின் முன்னுரையில் ஆசிரியர் சொல்கிறார்: ''கதைகளைத் தேடி படைப்பாளி பயணம் செய்து, முகாம் போட வேண்டிய அவசியமில்லை. அவனைத் தேடி அவன் இருக்கும் இடத்திற்கு வரும் அனுபவங்களைக் கதைகளாக்கினால் போதும்.'' இக்கதைகளை எழுதிவிட்டு எழுத்துக்கெழுத்து ஒத்துப் போகும்படியான வாக்கு மூலமாக இதைச் சொல்லியுள்ளார் என்றே தோன்றுகிறது.

இந்நூலில் உள்ள கதைகளில் எந்த ஒன்றையும் கதை

படிப்பகம்

www.padippakam.com

யாக நம் சொற்களில் சொல்ல முனைந்தால் நாம் தோற்ப தோடு நூலாசிரியருக்குத் துரோ கம் இழைக்கிறோம் என்றாகி விடும். அத்தனை சாதாரண சம்பவங்கள். ஆனால் அவை எழுப்பும் மன அலைகளும், அதிர் வுகளும், உள் முகப்பார்வை யும், விழிப்பும், இனிய கவிதை களாய், பச்சைக் குழந்தையின் எச்சில் முத்தங்களாய், சின்னக் குருவியின் சிறகுச் சிலிர்ப்புக ளாய், பனியில் நெய்த மஸ்லின் பூக்களாய் நம்மை ஆட்கொள் கின்றன.

ஒவ்வொரு கதையும், உருவ கமும் "ஒரு தத்துவத்தின் அர்த்த புஷ்டியுள்ள விளக்க மாக" இருப்பதை நாம் அனு பவிக்க முடிகிறது.

மரணம் ஒரு மனிதனைப் பாதித்த போது, "எல்லோரும் விளிம்பிற்கு வந்து நிற்பதை மறந்துவிடக் கூடாது. எந்த நேரத்திலும் கால்கள் விளிம்பி லிருந்து விலகிக் கீழிறங்கக் கூடும்," என்ற உண்மை எத் தனை இயல்பாய் வந்து தாக்கு கிறது!"

ஒரு மறதியின் காரண மாய்ப் பிறன் காசைத் தன் காசென்று சத்தம் போட்டு நிலை நாட்டிவிட்டு, வீடு வந்து உண்மை அறியும் போது காசை இழந்தவனின் மௌனம் அவ னைக் குத்திக் கிழிக்கிறது."சத் தத்தில் துலங்காத உண்மை மௌனத்தில் சூரியப் பிரகாச மாக வெளிப்படும் என் றானோ?" என்று தன் சத்தத் தின் சர்ப்பத் தீண்டலில் குன் றிப் போகிறான்.

"சாருக்கு எப்பவும் கெழவி சுதான் பிடிக்கும்," என்று சரி யாகவே தன் நண்பனால் கணிக் கப்படும் ஒருவனை ஒரு நாட்டு வைத்தியன் "ஒரு மந்திரவாதி போல், ஒரு ஜால வித்தைக் காரன் போல், புலன்களை ஒடுங்க வைத்து, சக்தி இழக்கச் செய்கிறான்."

இக்கதையில் தரப்படும் விவரங்களுக்காக நூலாசிரியர் கொஞ்சம் சிரமம் எடுத்துக் கொண்டிருப்பார் என்றே படுகி றது. அதன் காரணமாகவே கதை நாட்டு வைத்தியன் மருந்தை உட்கொண்டு கட்டு றுதி பெற்றது போல் தன்னை அதன் தளத்திலும் தரத்திலும் நிறுத்திக் கொள்கிறது.

ஒரு போலீஸ்காரன் மாட்டு வண்டியோட்டியைச் குரூர மாய்த் தாக்கியதைக் காணும் ஒருவன் உணர்வுகளும், எண் ணங்களும், பின் நினைவுகளும், கனவுகளும் தடங்கள் அமைத்து, முடிவில் தார்மீகக் கோபம் மறைந்து தற்பெருமைக் கற்ப னையில் முடியும்போது, "அடித் தொண்டை கிழிய யாரோ கா றித்துப்பினார்கள். அவன் சுற்று முற்றும் பார்த்தான். எவ ருடைய நடமாட்டமும் தெரிய வில்லை. யோசித்தபோது அவ னுக்கு ஒன்று உறுதியாயிற்று. இது வெளியிலிருந்து கேட்ட தல்ல. ஆமாம் நிச்சயமாக இது வெளியில் நிகழ்ந்திருக்க முடி யாது," என்று முடிக்கிறார். இதில் தாசன் என்னும் கலை ஞனை நம்மால் தரிசிக்க முடிகி கிறது.

படிப்பகம்

www.padippakam.com

எல்லாம் சரிதான். ஆயினும் நமக்கு இந்நூலாசிரியர் மேல் ஓர் ஆதங்கம் உண்டு. அதை இங்குச் சொல்லியே ஆகவேண்டும்.

பாரதம் எழுதிய வியாசன் எத்தனை பெரிய ஞானி! எழுத்துச் சித்தன்! பகவானே அருளியதாகச் சொல்லிப்பரவும் பகவத் கீதையையே நமக்குக் காட்டிக் கொடுத்த அறிஞன். அந்த அறிஞன் அவன் காலத்தில் நடைமுறையில் கடைபிடிக்கப்பட்டு வந்த இரண்டு விஷயங்களை மறு பரிசீலனைக் குட்படுத்தாமல், உட்படுத்த வேண்டும் என்ற சிந்தனையே இல்லாமல் குருட்டாம் போக்கில் ஒத்துப் போகிறான். அரக்கு மாளிகையிலிருந்து பாண்டவர்கள் தப்பிப் போகும் போது, அவர்கள் எரிந்துதான்போனார்கள் என்று நம்ப வைக்க ஒரு கீழ்ச்சாதி மாதும் அவள் ஐந்து மகன்களும் எரிக்கப் படுகிறார்கள். அந்தக் கொலைகளுக்காக வியாசனும் சரி, பாரதக் கதையின் பரம ஞானிகளும் சரி, 'எல்லா உயிர்களிலும் நானே இருக்கிறேன்' என்று முழங்கிடும் கண்ணனும் சரி, யாரும் ஒரு சிறு வருத்தம் கூடத் தெரிவிக்கவில்லை. காரணம், இழிகுலத்தோர் மனிதர்களில் சேர்த்தியில்லை. விலங்குகளுக்கு ஒப்பானவர்கள். அவர்கள் உயர்குலத்தோருக்காக உயிர்த் தியாகம் செய்யப் பிறந்தவர்கள்' என்ற ராட்சச ஞானம். வியாசனும் அதைப் பரிசீலிக்காமல் ஒப்புக் கொள்கிறான். மற்றொன்று "பெண்கள் வெறும் போகப் பொருள்கள். பண்டமாற்றுக்குப் பயன்படுபவர்கள். அவர்கள் புத்திசாலிகளோ, தனிப்பட்ட மனித அந்தஸ்துக்கு உரியவர்களோ அல்லர்" என்ற சமூக மௌடீகம் வியாசன் இதையும் பரிசீலிக்கவில்லை. ஒருவேளை இந்நூலாசிரியர் தாசன் அவர்களும் இந்த இரண்டாவது விஷயத்தில் வியாசனோடு ஒத்துப் போகிறாரோ என்று நம்மை யோசிக்க வைக்கிறது.

'மந்தை' என்னும் கதையில் 'ஆனை'க்கு காசு போட அடம் பிடிக்கும் சிறுவனின் தாயாரைக் கருமியாக நமக்குச் சித்தரிக்கிறார். அதற்காகச் சொல்லும் காரணமோ நம்மைக் கலங்கவே வைக்கிறது. ஆசிரியரோ 'அருமையான ஜோக்கை கேட்டது போல் விழுந்து விழுந்து சிரிக்கத் தோன்றும்" என்கிறார்

மேலும் அவள் ஒரு தாயாக அறிமுகம் ஆகிற நிலையில் 'பெண் என்ற நினைப்பில் இயற்கையாகப் பூக்கும் நெகிழ்ச்சி உணர்வுகளில் ஒன்றைக் கூட இவளால் சிருஷ்டித்துத் தரமுடியாது,' என்ற பார்வை கதைக்கு என்ன பலம் சேர்க்கிறது? வியாச பார்வை என்பதாகாதா

'மோப்பம்' என்னும் கதையில் மோப்பம் கொள்ளும் ஆணின் பார்வையில் மொக்கைப் பற்களை மறக்கச் செய்யும் பிருஷ்டத்தின் அசைவு. 'அவளும் இவளும்' என்னும் கதையில் நாயகி பார்க்கப்படும் பார்வை. 'சுயவதம்' என்னும் கதையிலும் கடைசி உருவகத்திலும் அப்ப

படிப்பகம்

www.padippakam.com

னின் பார்வையில் அலட்சிய மாய் நிறுத்தப்படும்- பிள்ளை யைப் பற்றி புத்தி சாதுர்ய மான எண்ணங்களற்ற பெற் றவள். 'நெருப்பை விழுங்கும் மயில் குலம்' கதையின் சேரி மனோபாவப் பெண்கள்,

வியாசன் பரிசீலிக்காத விஷ யங்களை சில ஆயிரம் ஆண்டுக ளின் சமூகப் பரிமானங்களோடு தாசன் பரிசீலிக்க வேண்டும் என்பதற்காக இதைச் சொன் னோம். காரணம் தாசன் போன்ற எழுத்துச் சித்தர்கள் சமூக மாற்றத்தைக் கூடச் சற் றுத் தள்ளி வைக்கும் வல்லமை படைத்தவர்கள்.

---

## வினாக்களும் சுரதாவின் விடைகளும்

உவமைக் கவிஞர்
சுரதா

பக்கங்கள்: 184 விலை ரூ.23
சுரதா பதிப்பகம், 56அ, இலட் சுமணசாமி சாலை, கலைஞர் கருணாநிதி நகர், சென்னை-600078.

---

இந்த நூலைப் படித்து முடித்த பின் பிரமிப்போடு சிறிது நேரம் உட்கார்ந்து விடு கிறோம். அடுத்தடுத்து வரும் அலைகள் மாதிரி எத்தனை விஷ யங்கள்! எத்தனை விவரங்கள்! எத்தனை துருவல்கள்! நயங்கள்! இவை அனைத்தையும் அழகாய் இணைத்து நிற்கிறது, அச்ச மின்மை என்னும் மெழுகு பூசி, பிசிறு நீக்கிய கெட்டிப் பட்டி ழையாக சுரதாவின் செம்மாந்த கவிதையுள்ளம்.

உவமைக் கவிஞர் சுரதா தம்பளவில் ஒரு மகா கவிதான்; சிந்தேகமே இல்லை. ஆனால் உலகளவில் அதை உயர்த்திப் பிடிக்காமல் ஏன் நின்று போ னார் என்று யோசிக்க யோ சிக்க... மெலிதாக, மிக மெது வாக, சில காரணங்கள் மினுக் கிடுகின்றன. எதிலும் முழுமை தேடி, அடி முதல் முடி வரை விவரங்கள் தேடி வியர்த்தப் படுத்திய அரிய காலமும், அடி நாள் இன்னல்கள் மீண்டும் தம்மை அணுகிவிடக் கூடாது என்னும் தற்காப்புணர்ச்சியும், ஒன்றைப் பரிசீலிக்க பல நூறு கோணங்கள் உண்டு என்பதை மறுத்து வரம்பு கட்டும் கோட் பாட்டு விலங்கும், தமக்குப் பிடித்தவற்றிலும் தம்மையே மறந்து கரைத்துக் கொள் ளாத அறிவுப்புலனும்தான் கார ணங்களோ என்று படுகிறது. இந்தக் கூர்த்த மதிக் கவிஞன் 'அறிவுக் கயிறு' என இறுமாப் புடன் இறுக்கிக் கட்டிக்கொண் டிருந்த தன் அரைஞாண் கயிற் றைச் சற்று நெகிழ்த்தியிருந் தால், 'சித்தம் போக்கு சிவம் போக்கு' என்னும் பொடியை ஒரு சிட்டிகை எடுத்து உறிஞ் சிக்கொண்டு அர்த்தம் தேடியி ருந்தால், ''பொடி போடுவ தைத் தவிர வேறெந்தக் கெட்ட பழக்கமும் எனக்கில்லை'' என மார் தட்டிக் கொள்வதில் மகிழ்ந்து போகாமல் கொஞ்சம் போதையிலும் பேதையிலுமாய் தம்மில் ஆனந்தம் தேடியிருந் தால், இவரை விஞ்சக் கூடிய கவிஞன் இனிமேல்தான் பிறக்க வேண்டும். அப்பழுக்கில்லாத

www.padippakam.com

தாய்மை என்பது மகா புருஷனை மனிதனாக்கும் சாபமே என்பதையும், மாறாத கொள்கை என்பது சிந்தனைத் தடங்களை மறிக்கும் கிளுவைப் புதர்கள் என்பதையும் இந்தக் கவிஞர் மறுத்து வாழ்ந்ததன் நஷ்டம் நாம் ஒரு மகா கவியை வெறும் தன்மானக் கவிஞனாக சுருக்கி எழுதிக்கொண்டதுதான்

இந் நூலில் 51 நேர்காணல்கள் தரப்பட்டுள்ளன. 'வினா - விடை'யாக வெளிவந்துள்ள 74 நூல்களின் பட்டியலும் ஆண்டு வாரியாகத் தரப் பட்டுள்ளன.

''இந்தச் சுரதா எத்தகைய துணிச்சலான புதுமைக் கருத்துகளுக்குச் சொந்தக்காரன் என்பது இந் நூலில் வரும் என் விடைகளைப் படித்தாலே விளங்கும்,'' என்று கவிஞர் தம் முன்னுரையில் உரைக்கிறார். சத்தியமான வாக்கு. தற்பெருமையாக உங்களுக்குப் பட்டால் அது உங்கள் குற்றம். அறிவே இல்லாத சோதா மேதைகள் தங்களுக்கென்று ஒரு ஜால்ராக் கும்பலை வைத்துக் கொண்டு 'ஆகா! ஓகோ!' என்று பாராட்டுப் பெறுவதை, மாலை மரியாதை செய்து கொள்வதைச் சகித்துக் கொள்ளும் உங்களுக்கு சித்தத் தெளிவும் செய் திறன் நேர்த்தியுமுள்ள கவிஞன் தன் பெருமையைச் சரியான சொல்லெடுத்து முழங்குவது தற்பெருமையாகப்படலாமா?

''என்னைப் பற்றி ஒரே வாக்கியத்தில் விளக்க வேண்டுமானால், நான் சந்தர்ப்பங்களால் தோற்றுக் கொண்டிருப்பவன்; குறைந்தது ஆயிரம் புத்தகங்களில் நித்திரை செய்யும் எண்ணங்களை எல்லாம் வடித்து என் இதயத்திலே வைத்துக் கொண்டிருப்பவன்,'' என்று தம்மை அறிமுகப் படுத்துகிறார் கவிஞர். இந்தத் தெளிவான மதிப்பீடு கவிஞருக்கே உரிய தனிப் பெரும் சொத்து.

கவிஞருக்குப் பாரதிதாசன் மேல் அளவற்ற பற்று. அவரை சந்தித்த 14-1-1941ஐத் தமது வாழ்வின் சிறந்த நாளாகக் கொள்ளும் பெருமிதம். 'சுப்புரத்தின தாசன்' என்னும் பெயரின் சுருக்கமாக 'சுரதா' என்று தம் பெயரை மாற்றிக் கொண்டதில் ஒரு நிறைவு. இத்தனைக்குப் பின்னும் அவர் யாருக்கும் தலை வணங்காதவர். குற்றத்தைக் குற்றம் என்று சொல்வதில் நக்கீரன். உண்மை கூறுவதில், ''ஆசானின் கூற்றாயிருந்தாலும் அது ஆண்டவன் கூற்றாயிருந்தாலும் வரலாற்றை நான் மறைக்க விரும்பவில்லை,'' என்று கூறும் செம்மாந்த நெஞ்சுறுதி கொண்டவர். 'பாரதிதாசனுக்கு இருந்த கல்வி பாரதிக்கு இல்லே' என்று தம் குருவை ஒரு படி மேலே வைக்கிறார். ஆனால், உண்மை பேச வேண்டும் என்று வரும்போது, ''நான் பாரதிதாசனைப் பெரிதும் மதிக்கிறவன் தான். ஆனால், அவரை விட முற்போக்கானவர்கள்- சீர்திருத்த வாதிகள் அவருக்கு முன்பே இருந்திருக்கிறார்கள் என்று சொல்வதே தவறாகி விடாது. சுதந்திரப் போராட்ட காலத்தில் அந்தச் சிந்தனையே இல்லாது, 'சுப்ரமணிய துதி' பாடிக்

படிப்பகம்

www.padippakam.com

கொண்டிருந்த பாரதிதாசன் புரட்சிக் கவிஞராகக் கருதப்படுகிறார். இவரை விடவும் காலத்தை முன்னுணர்ந்து புதிய புதிய சிந்தனைகள் தந்தவர்களைக் காலமும் மக்களும் மறந்து விடுகிறார்கள்,'' என்று பட்டு தெரித்தாற்போல் சொல்கிறார்.

புகழ்பெற்றவர்கள் பற்றிய கவிஞரின் மதிப்பீடுகளும் புகழ் பெற்றவை, காமராசர் பற்றி, ''குறைவான குற்றமுடைய ஒரு அரசியல் தலைவர்,'' என்கிறார். பக்தவத்சலம் பற்றி, ''பண்பாடு மிக்கவர். ஆழ்ந்த அனுபவம் உடையவர். அவரால் அவரது பதவிக்குப் பெருமை,'' என்கிறார். ''இதுவரை தமிழ் எனக்குச் சோறு போட்டது. இனி நான் தமிழுக்குச் சோறு போடப் போகிறேன்,'' என்று சொன்ன வைரமுத்துவுக்கு விடையாக, ''இது ஒரு ஆணவமான சிந்தனை. தமிழ் என்பதே தேன். தேனுக்கு உணவு தேனா? கவிஞனை அழைத்து விருந்து வை. தமிழை அழைத்து விருந்து வைக்காதே. அதுவே விருந்து,'' என்று அறைகிறார்.

''பிறவியிலேயே ஒருவன் கவிஞனாகப்பிறக்கிறான் என்பதெல்லாம் பித்தலாட்டம். கவிதைக்குக் கற்பனை தேவையில்லை. கடவுளின் அருளும் தேவையில்லை. கவிதை என்பது ஒரு சயன்ஸ். நன்றாகப் படித்தால் எழுதலாம். தன் படைப்புக்குக் கவிதை அந்தஸ்தைத் தேடித்தர கவிஞன் கடுமையாக உழைக்க வேண்டும். மூக்கில் நுழைவது தான் மூச்சு. முதுகைத் தடவிச் சென்றால் அது காற்றுத்தான்,'' என்று கவிதைக் கலை பற்றிச் சொல்கிறார். பல பேட்டிகளிலும் இதே கருத்தையே வலியுறுத்தும் கவிஞர் ஓரிடத்தில் கண்ணதாசனை மனம் திறந்து பாராட்டும்போது, ''ராமலிங்க அடிகளுக்குப் பிறகு பாமர மக்களுக்கும் புரியும்படி கவிதை எழுதிய சித்தன் கண்ணதாசன். ஒன்றிரண்டு அல்ல; ஐயாயிரம் கவிதை எழுதிய படைப்பாளி. இதைப் பயிற்சியிலும் முயற்சியிலும் பெற்று வெற்றியடைய முடியாது. கருவிலேயே கருத்துடையவராக இருந்ததால் தான் நினைவில் நிற்கிறார் கண்ணதாசன்,'' என்கிறார். இந்த ஒற்றை முரண்பாட்டில் கவிஞர் கலப்படமில்லாத கவிஞராகவே கம்பீரம் காட்டுகிறார்.

சினிமா பற்றிய தகவல்களின் பெட்டகமாகத் திகழ்கிறது இந்நூல். புதுக்கவிதை பற்றிய கவிஞரின் அபிப்பிராயம் புதுக்கவிதை போலவே பிடிமானத்துள் அடங்காமல் விரிகிறது. கவிஞரின் கடைசி விருப்பம் இவ்வாறு வெளிப்படுகிறது:

''நான் இறந்த பின் என் நினைவாக, முதல் பாடலாக 'அமுதும் தேனும் எதற்கு...' என்னும் பாடலையும், முடிவில் 'ஆடி அடங்கும் வாழ்க்கையடா' என்ற பாடலையும் வானொலியில் ஒலிபரப்ப வேண்டும்.''

மொத்தத்தில் இந்நூல் ஒவ்வொரு படைப்பாளன் கையிலும் இருக்கவேண்டிய நூல். ○

படிப்பகம்

www.padippakam.com

# காற்றின் நாயகன்

## இராம. கண்ணப்பன்

'உலகம் பிறந்தது எனக்காக
ஓடும் நதிகளும் எனக்காக
மலர்கள் மலர்ந்தது எனக்காக அன்னை
மடியை விரித்தாள் எனக்காக!'

என்று காவியக் கனவு கண்டவர் கவிஞர் கண்ணதாசன்.

'காலம் சிறிது கனவுகள் பெரிது
கவலைப் படுவதேன் மனது?'

என்று கேள்வி கேட்டு, கவலை இல்லாத மனிதனாக வாழவேண்டும் என்று ஆசைப் பட்டவர் கவியரசர்.

தான் மட்டுமல்ல; தன்னைச் சார்ந்தவர்களும் சுற்றியிருப்பவர்களும் கவலையற்றவர்களாக இருக்க விரும்பினார்.

கவலையுள்ள மனிதர்களைக் கண்டால் கசிந்துருகுவார்.

'ஒன்று நடந்துதான் தீரும் என்றால் அதைப் பற்றிக் கவலைப்படுவதால் காரியம் கைகூடுமா என்ன?' என்று கேட்பார்.

'துணிந்தவனுக்குத் துக்கம் இல்லை' என்ற முதுமொழிக்கு அவர் அடையாளமாக விளங்கினார்.

"எதிலும் அச்சம் எதிலும் ஐயம்
எடுத்ததற்கெல்லாம் வாடுகிறான் —தன்
இயற்கை அறிவை மடமை யென்னும்
பனித்திரை யாலே மூடுகிறான்!"

இத்தகைய மனிதர்களை அவர் வெறுத்தார்.

நம்பிக்கை உள்ளவர்களை அவர் நேசித்தார்.

தனது இருபத்துமூன்று இருபத்து நான்காவது வயதில் கவலை இல்லாத மனிதர்கள் வாழும் கேள்விகள் அற்ற தேசம் ஒன்றை நவீனமாக எழுத முயன்றார். 'தோமான்' என்ற அந்த தேசம் அறிவிப்பாக மட்டும் வந்தது.

இவ்வாறெல்லாம் தானும் தான் வாழும் உலகமும் இயங்க வேண்டும் என்று எண்ணிய கவியரசர் கண்ணதாசன் இந்நிலை எய்துவதற்கான ஆரம்ப காலத்தில் பட்ட துயரங்களும் கொண்ட கவலைகளும் கொஞ்சமல்ல.

ஐந்து தமக்கையருக்கும் இரண்டு தமையன்களுக்கும் தம்பியாகப் பிறந்தவர். பெரிய குடும்பம். தந்தையோ செலவாளி.

வாழ்ந்த குடும்பம் வறுமைக்குள் நுழைந்த போது முத்தையா என்ற கண்ணதாசனின் பள்ளிப் படிப்பும் பாதியில் நின்றது.

படிப்பகம்

www.padippakam.com

எட்டாவது வகுப்பிற்குப் பிறகு அவரது அனுபவக் கல்வி உலகக் கலாசாலையில் ஆரம்பமாயிற்று.

இலக்கியத்தின் மீது காதலுற்று, எழுத வேண்டும், படைக்க வேண்டும் என்ற ஆர்வம் அவரது பன்னிரண்டாவது வயதிலேயே அவரைப் பற்றிக் கொண்டதால் உலகத்தின் பாடங்களை மிக எளிதாகப் புரிந்து கொண்டார்.

ஏழ்மையின் ஏக்கம், வறுமையின் வாட்டம்—
இன்பத்தின் எக்காளம், துன்பத்தின் துவளல்—
ஏளனம், அவமானம், மேடு பள்ளம்—
பசி, பட்டினி

'பட்ட துயர் மெத்த வுண்டுங்க' என்று சொல்லுமளவுக்கு அனுபவக் கல்வி அவருக்குத் தெம்பையும் துணிச்சலையும் வளர்த்தது.

ஏழ்மை மிரட்டி விரட்டிய சாலைகளில் நடந்த அவர் எழுத்தாளரானார்

தனது பதினேழாவது வயதில் ஒரு இலக்கிய இதழின் ஆசிரியரானார்.

'கண்ணதாசன்' என்ற பெயரில் வெளிச்சம் படுகிறது. அவரது பத்திரிகைத் தொடர்புகள் விரிவடைகின்றன.

கவிதை உணர்ச்சிகள் கொப்புளித்து நிற்கின்றன.

பாரதிதாசன் பரம்பரையில் கவிஞனாக வேண்டும் என்று எழுதப்பட்ட கவிதை அவரது ஆசிரியராலேயே புறக்கணிக்கப் படுகிறது. அந்தப் புறக்கணிப்பே அவருள் ஓர் சவாலாக எழுந்து சந்தர்ப்பத்திற்காகக் காத்திருக்கச் செய்கிறது.

வாழ்க்கை நதியில் அடித்துச்செல்லப்பட்டு, உருண்டு புரண்டு, முட்டி மோதி, அவர் திரையுலகக் கரையை எட்டிப் பிடித்தார்.

கதை எழுத வேண்டும் என்ற ஆசை பின் போக பாட்டெழுதத் தெரியுமா? என்று சந்தர்ப்பம் கேட்டு நிற்கிறது.

'தெரியாது' என்று சொல்லத் தெரியாத கண்ணதாசன் 'தெரியும்!' என்று சொல்லுகிறார்.

'கலங்காதிரு மனமே நீ
கலங்காதிரு மனமே —உன்
கனவெல்லாம் நனவாகும் ஒரு தினமே!'

என்று திரைக் கதைக்குப் பொருத்தமாகவும், தன் மனதுக்குச் சமாதானமாகவும் முதற்பாட்டை எழுதி திரை உலகில் காலடி எடுத்து வைத்தார் கண்ணதாசன்.

'விரும்பியது கிடைக்கவில்லை எனில் கிடைத்ததை விரும்பு' என்கிற அவரது கோட்பாடு செயல் படத் துவங்குகிறது.

**1949**ஆம் ஆண்டு தொடங்கி **1957**ஆம் ஆண்டு வரையில் அவர் ஆதரவற்றவராகவே இருந்தார் எனலாம். ஆனால் 'கவி

படிப்பகம்

www.padippakam.com

யரசு' என்ற உயரிய விருதைப் பெற்றுவிட்டார். இனவாத அரசியலில் ஆவேசமாகப் பங்கு பெற்றார். ஒரு இலக்கிய வார, மாத இதழ்களின் ஆசிரியராகவும் இருந்தார். திரையுலகில் ஈட்டிய பணத்தை யெல்லாம் பத்திரிகைகளில் போட்டு நஷ்டக் கணக்கைக் கண்டார். பத்திரிகையால் பகைகளை வரவு வைத்தார்.

1957இல் நடைபெற்ற இரண்டாவது பொதுத் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வி கண்ட பிறகே திரையுலகில் தனது கால்களை வலுவாக ஊன்றிக் கொண்டார்.

''படித்ததனால் அறிவு பெற்றோர்
ஆயிரம் உண்டு —பாடம்
படிக்காத மேதைகளும்
பாரினில் உண்டு!''

என்பதற்கு அடையாளமாக விளங்கினார் அந்த அறிவுமேதை, அனுபவ மேதை.

1957, 58, 59 - ஆண்டுகளில் அவர் மூன்று திரைப் படங்களைத் தயாரித்து வெளியிட்டார். அவை முறையே,

மாலையிட்ட மங்கை
சிவகங்கைச் சீமை
கவலை இல்லாத மனிதன்.

இந்த மூன்று படங்களில் கவலை இல்லாத மனிதனான கவிஞர் கண்ணதாசனை கதிகலங்கிக் கவலை கொள்ள வைத்த படம் கவலை இல்லாத மனிதன்தான்.

இந்தப் படத்தைத் தயாரித்து வெளியிட்ட போது கவிஞர் அடைந்திருந்த நஷ்டம் சுமார் ஏழரை லட்சம் ரூபாய்!

கவலை இல்லாத மனிதன்
உலகத்தை அறிந்தவன் துணிந்தவன்.. அவனே
கவலை இல்லாத மனிதன்!
போவதைக் கண்டு கலங்காமல்
வருவதைக் கண்டு மயங்காமல்
மெய் தளராமல் கை நடுங்காமல்
உண்மையைப் பொய்யை உணர்ந்தவனே!...
உலகத்தை அறிந்தவன் துணிந்தவன் அவனே
கவலை இல்லாத மனிதன்!

இவ்வளவு பெரிய கடனை எப்படித் தீர்க்கப் போகிறோம் என்று கவிஞர் கலங்கிக் கவலைப் பட்டாலும், 'கட்டத்தானே வேண்டும்? கட்டுவோம்!' என்று திடத்தோடு கூடிய சமாதானம் அடைந்தார்.

இந்தப் படத்தின் வாயிலாக அவருக்குக் கிடைத்த லாபம் ஏராளமான அனுபவங்கள். திரையுலகிற்குக் கிடைத்தவை அற்புதமான தத்துவப் பாடல்கள். இந்தப் பாடல்களுக்குக் கிடைத்த பணமெல்லாம் கடன் தந்தவர்களுக்குக் கிடைத்த வட்டிகள்.

படிப்பகம்

www.padippakam.com

போவதைக் கண்டு கலங்காமல்
வருவதைக் கண்டு மயங்காமல்
மெய் தளராமல் கை நடுங்காமல்...

நோட்டெழுதி வாங்கிய பணத்துக்குப் பாட்டெழுதி வட்டி கட்டினார் கவியரசர்.

இந்த நிலை நீடித்த போது, அன்றைய சினிமா உலகின் பெரும்புள்ளி ஒருவர் கவிஞரை அழைத்து, கவிஞருக்குக் கடன் தந்தவர்களையும் அழைத்து தனித்தனியே சமாதானம் பேசினார்.

ஒரு சிலர் ஒத்து வந்தார்கள். பலர் ஒத்து வர மறுத்து விட அவர், "கண்ணதாசன், நீ வாங்கிய கடனுக்கு மேல் வட்டி கொடுத்து விட்டாய். எனவே 'ரூபாய்க்கு இரண்டணா என்று தீர்த்துக்கொண்டு கணக்கை நேர் செய்துகொள்ளுங்கள்' என்று கூறினேன். ஒப்புக் கொள்ளப் பலர் மறுத்து விட்டார்கள். எனவே நீ ஐ.பி. கொடுத்து விட்டு 'முத்தையா' என்ற பெயரில் பாட்டு எழுது!" என்று கூறினார்.

"மாட்டேன். நான் தொழில் செய்தே வாங்கிய கடனை அடைப்பேன்!" என்று கூறிவிட்டார்!

"கண்ணதாசன்! உனது துணிச்சலைப் பாராட்டுகிறேன். நீ வாழ்க!" என்றார் அந்தப் பெரியவர்.

1967 - 68இல் இந்த நெடுங்கடன் முடிந்தது.

இதே ஆண்டுகளில் பாகிஸ்தான் பாரதத்தின் மீது படையெடுத்தது. யுத்த முனைகளில் நம் வீரர்கள் பாகிஸ்தான் படைகளைப் பந்தாடிக் கொண்டிருந்தனர்.

அவர்களை உற்சாகப் படுத்தும் பொருட்டு தென்னிந்தியக் கலைஞர்கள் வரவேண்டும் என்று மத்திய அரசு வேண்டுகோள் விடுத்தது.

கலைஞர்களை ஒன்று திரட்டி அழைத்துச் செல்லும் பொறுப்பை ஏற்றிருந்தார் கவிஞர்.

முன்னணி நடிகர்கள், நடிகைகள், பின்னணிப் பாடகர்கள், இசையமைப்பாளர்கள் எல்லோரும் சென்றனர். சென்று திரும்பும்போது அப்போது குடியரசுத் தலைவராக பொறுப்பு வகித்த டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் தனது மாளிகையில் கலைஞர்களுக்கு ஓர் விருந்து கொடுந்தார்.

அப்போது குடியரசுத் தலைவர், "யாராவது பாடுங்களேன்" என்று கேட்டார்.

குழுவில் சென்றிருந்த நடிகர் சந்திரபாபு பாடினார்.

பிறக்கும் போதும் அழுகின்றாய்
இறக்கும் போதும் அழுகின்றாய்
ஒரு நாளேனும் கவலை இல்லாமல்
சிரிக்க மறந்தாய் மானிடனே!

படிப்பகம்

www.padippakam.com

இரவின் கண்ணீர் பனித்துளி என்பார்
முகிலின் கண்ணீர் மழையெனச் சொல்வார்
இயற்கை அழுதால் உலகம் சிரிக்கும்
மனிதன் அழுதால் இயற்கை சிரிக்கும்.

அன்னையின் கையில் ஆடுவதின்பம்
கன்னியின் கையில் சாய்வதும் இன்பம்
தன்னையறிந்தால் உண்மையில் இன்பம்
தன்னலம் மறந்தால் பெரும் பேரின்பம்!

இதே பாட்டை கவலை இல்லாத மனிதன் படத்தில் கதா நாயகனாக நடித்த சந்திரபாபுவே பாடியிருந்தார்.

இந்த உன்னதமான பாட்டைப் பாடி முடித்ததும் குடியரசுத் தலைவர், "அடடா! என்ன அர்த்தம்! என்ன அர்த்தம்!" என்று வியந்தாராம். உடனே சந்திரபாபு அவர் மடியில் தாவி அமர்ந்து தோளில் கை போட்டுத் தாடையைப் பிடித்து, "நீ தான்டா கண்ணு ரசிகன்!" என்றாராம்.

இந்தப் பாராட்டைக் கேட்க கவியரசர் குடியரசுத் தலை மாளிகையில் இல்லை. தான் தங்கியிருந்த ஓட்டலில் கவலை இல்லாமல் தூங்கிக் கொண்டிருந்தார். —வளரும்.

---

## மின்னலைப் போல் ஒரு சொல்!

நீ இறந்த உடனேயே மறக்கப்படாமல் இருக்க வேண்டுமானால், படிக்கப் பயன்படும்படி எழுதி வை; அல்லது எழுதப் பயன்படும்படி செயல்படு. —பெஞ்சமின் ஃப்ராங்க்ளின்

வரலாறு என்பது மனித ஞாபகங்களின் மேல் காலத்தால் எழுதப்படும் சக்கரச் சுழலாய் வரும் கவிதை. —ஷெல்லி

யார் வேண்டுமானாலும் சரித்திரம் படைக்கலாம். ஆனால் மகா மனிதன்தான் அதை எழுதி வைக்க முடியும்.

—ஆஸ்கார் ஒய்ல்ட்

நம்பிக்கையுள்ள மனிதன் வெற்றியையும் வெளிச்சத்தையும் பார்க்கிறான். அது இல்லாதவன் தோல்வியையும் நிழலையும் புயலையும் பார்க்கிறான். —ஓ.எஸ். மார்டன்

சொர்க்கத்தில் தேவதை பத்தோடு பதினொன்றுதான்.

—பெர்னாட் ஷா

ஒன்றையும் கற்றுக் கொள்ள முடியாத அளவு அறியாமையுள்ள ஒரு மனிதனை நான் ஒருபோதும் சந்தித்ததில்லை.

—கலீலியோ கலிலி

படிப்பகம்

www.padippakam.com

# புவியரசு

? ? ?

முதலாளிக்கும் மேலதிகாரிக்கும்
பெற்றோர்க்கும் மனைவிக்கும்
பிள்ளைகளுக்கும் கட்சிக்கும்
சீட்டுக்கட்டுக்கும் சினிமாவுக்கும்
மிச்சமில்லாமல் தன்னைப்
பிச்சுப் பிச்சுக் கொடுத்தபின்

ஊருக்கும் உலகுக்கும் கொடுக்க
என்ன இருக்கிறது மிச்சம்?

வெறுங்கையனாய் நின்று-
நித்திய வாழ்க்கை நீரோட்டத்தில்
நீந்த முடியாது கையோய்ந்து
மூங்கி மூழ்கையில்,
எதைப் பற்றுவாய் நீ?

'பற்றுக பற்றற்றான் பற்றினை!'

'பற்றற்ற பரமன் வாழும்
கோயில் கதவுகளில்
தலைமுட்டி மோதும்
மானிட வேதனைகள்.'
ஆலயக் கதவுகள்தோறும்
இரத்தக் கறைகள்!

பூட்டிய கோயிலினுள்ளில்
'காதல் மடப்பிடியோடும்'
கருக்கிருட்டில் பரமன்!

'யாதும் சுவடுபடாமல்'
நகை பறிபோகும் பயத்தில்...
அல்லது-
தானே காணாமல் போகும் திகிலில்!



பரமனைப் பற்றவும் வழியில்லை.
எஞ்சி நிற்பது சூனியமே.

சூனியத்தில் சுவடற்றுப் போவதோ
வாழ்க்கை?

படிப்பகம்

www.padippakam.com

# துறவியின்

## மூக்குத்திப் பூக்கள்

மௌனம் பூத்த ராத்திரி
தூரத்துக் குயிலோசை
என்னிடம் ஒரு கவிதை.

வளையலுக்கு மோகித்து
நீட்டிய கைகளில்
நிரந்தர விலங்கு.

சாம்பல் மேடுகள்
மண்டிக் கிடக்கும் மயானம்
பூவைச் சுற்றும் வண்டு.

விழி மூடி அமர்ந்திருக்கும்
புத்தன் உதடுகளில் புன்னகை
பட்டுப்போன போதிமரம்.

கோபுரக் கூடுகளில்
புறாக்களின் பிரார்த்தனை
தூரத்தில் துப்பாக்கிச் சத்தம்.

சாத்தானின் கழுத்தில்
சிலுவைச் சங்கிலி
சஞ்சலத்தில் ஏசு.

வண்ண வண்ணமாய்
வீதி முழுக்க கடவுள் ஓவியங்கள்
பிச்சை எடுப்பது யார்?

சின்னச் சின்ன தூறல்
முகம் சுளிக்காதே
விண்ணில் பூத்த வானவில்.

மரணம் செத்துப் போனது
காதலின் முன்னே
யமுனைக் கரை தாஜ்மஹால்.

பாதங்கள் இருந்தும்
சிறகுகளுக்கு ஏங்கும் இதயம்
கோவில் வாசலில் முடவன்.

ஆதாம் ஏவாளுக்கு
ஆடை கட்டி வைத்தது
சாத்தானின் ஆப்பிள்.

உலகம் இருட்டே என்று
நண்பகலில் விவாதம்
கண்களில் கறுப்புக் கண்ணாடி.

கூண்டைத் திறந்தேன்
கிளிகள் மூலையில் முடங்கின
பாவம் கொத்தடிமைகள்.

எரிந்து எரிந்து
ஓய்வு தேடும் என் விளக்கு
அதோ கிழக்கே சூரியன்.

பிரவாகமாய்ப் பாய்ந்தோடும்
பிறவி நதி வெள்ளம்
மங்கி வரும் ஆயுள் விளக்கு.

கர்வம் வேண்டாம் இரவே
அதோ உன் கல்லறை
எரியும் தீபச் சுடர்.

வஞ்சக இடையனின்
வைக்கோல் கன்று
பாத்திரம் தளும்ப பால்

படிப்பகம்

www.padippakam.com

**கோபி**

## இருள்

அன்று கர்ப்பப் பையிலும்
இருள்...

வாழ்க்கை—
மனிதன் இரவலாய் வாங்கிவந்த
ஒளி ..

ஒளியில் வழிநடத்திச் செல்ல
பார்வை பூக்கும் சோலையாய்
இரு விழிகள் ...

விழிகள் —
உலகத்தை உள்ளத்திற்கனுப்பும்
தூதுவர்கள் ...

விழிகள் இல்லாமல்
ஒளி உணரப்படுவதில்லை...

உங்கள் ஒளி நிறை வாழ்க்கை
மயான இருளுக்குள் போகுமுன்
விழிகளை இங்கேயே
விட்டுச் செல்லுங்கள்.

அவை பார்வை அற்றவர்களின்
உள்ளத்திற்குத் தூதுவர்களாய்
நியமிக்கப்படட்டும்.

இனி, இருள்
அதன் கர்ப்பப்பையில்
விழிக்கும் பொருள்!

**கு.இராமசெயம்**

## நிலை

போஸ்டர் ஒட்டுங்கள்.

சுண்ணாம்பு பூச முடியா
எங்களுக்கு
போஸ்டரிலேனும்
வண்ணம் பார்க்கும் வாய்ப்பு.

ஒட்டும்போதே கொஞ்சம்
மைதா தந்து போங்கள்,
தின்று முடிப்போம்.

பின்,
போஸ்டர் நடிகையின்
அங்கம் பார்க்க
கியூவில் நிற்போம்.

ப்ளீஸ்,
எங்கள் வீட்டின் சுவர்களில்
போஸ்டர் ஒட்டுங்கள்.



**இரா.ஆனந்தி**

## நானும் நீயே ஆகி...

உதயம் நீ! இதயம் நீ!
கதிர் நீ! ஒளி நீ!
வளமை நீ வெறுமை நீ!
பெருங்கனல் நீ! புதுப்புனல் நீ!
ரணம் நீ! குணம் நீ!
ஆறுதல் நீ! அறிதல் நீ!
எண்ணம் நீ! எழுத்தும் நீ!
ஆதி நீ! அந்தம் நீ!
அனைத்தும் நீ!
நான் என்பதும் நீயே ஆகி!...

படிப்பகம்

www.padippakam.com

## தென்னம்பட்டு ஏகாம்பரம்

# வானுலகம் வசமாகும்

வானத்தில் மிதப்பது கனவாகும்.
மண்ணில் நடப்பது வாழ்வாகும்
கானமும் களிப்பும் பொய்யாகும்
கவலையும் ஏக்கமும் நடப்பாகும்.

புயலும் பூகம்பம் தடமாகும்
போகும் இடம்மலைச் சரிவாகும்
அயராப் பயணமே வாழ்வாகும்
ஆண்டவன் ஒருவனே துணையாகும்.

செல்வம் தேடும் தேட்டத்தில்
சேயிழை இன்பப் போதையிலே
செல்லாக் காசாய் ஆகாமல்
சித்தம் தெளிய வழிதேடு.

உறவும் நட்பும் சுமையாகும்
உன்னிலை தாழ்ந்தால் தெளிவாகும்
அறிவதை அறிந்தால் பேரின்பம்
அத்தனை அறிவதே அறிவாகும்.

இளமையும் வாழ்க்கையும் கரைந்துவிடும்
இன்பமும் துன்பமும் மாறிவரும்
வள்ளல் திருவடி பற்றிவிடின்
வானு லகம்உன் வசமாகும்.



படிப்பகம்

www.padippakam.com



# தழும்பு

நரம்புப் பின்னலுக்குள்
இணைந்த எலும்புகளின் மீது
சதைப்பாசி பிடித்த எதுவோ நான்.
இறுகிய திரவமா, இளகிய பாறையா நான்?
எப்பொழுதும்
தொணதொணத்துக் கொண்டிருக்கும்
பசியால்
நான் எதுவோ ஆனேன்.
மார்பெலும்புகள் எனக்கில்லை.
அது இறுக்கிப் பிடித்திருக்கும்
வறுமையின் விரல்கள்.
இரைப்பைக்குப் பதில்
கர்ப்பப் பை இருந்திருக்கலாம்;
எங்காவது நிறைத்திருப்பேன்.
இல்லையேல்,
மூளையை வயிற்றில் வைத்து
பசியை மண்டையில் வைத்திருக்கலாம்;
சின்ன மண்டைப் பசி நீக்க
வறுமை போதுமானதே.
என் மரணிப்பில்
பசி மரணிப்பதில்லை.
அது எங்காவது
பசித்துக்கொண்டுதான் இருக்கும்.
நம்பிக்கையின் முன்
வாழ்க்கை,
சொரசொரக்கும் உடம்பில்
மினுமினுக்கும்
சிறு அம்மைத் தழும்பாய்...



www.padippakam.com

முத்து எத்திராசன்

# கவிதை

கள்ளி முதிர்ந்தால் அகிலாகும்
காளான் வளர்ந்தால் உணவாகும்
பள்ளம் நிறைந்தால் குளமாகும்
பயிர்கள் வளர்ந்தால் வளமாகும்
வெள்ளி எழுந்தால் விடிவாகும்
வீணை விரலால் இசையாகும்
உள்ளம் மகிழ்ந்து சொற்களையே
ஒன்றாய்க் கோர்த்தால் கவியாகும்.

சந்தனம் முதிர்ந்தால் மணமாகும்
சிப்பியில் பிறப்பது முத்தாகும்
சந்திரன் எழுந்தால் அழகாகும்
சாமந்தி காய்ந்தால் சிவப்பாகும்
எந்தை யுடன்தாய் மகிந்தென்னை
ஈன்ற இடந்தாய் நாடாகும்
சிந்தையில் கருத்துகள் தோன்றிபல
சந்தங்கள் கொண்டால் கவியாகும்.

மண்ணில் பிறப்பது உணவாகும்
முகிலில் உதிர்வது மழையாகும்
பண்ணோ டிழைவது பாட்டாகும்
பண்போ டிசைவது புகழாகும்
கண்ணில் கனிவதுள் ளன்பாகும்
கருணை அதன்முதிர் கனியாகும்.
எண்ணம் எழுச்சி கொண்டுவிட்டால்
எழுத்தில் சிலிர்ப்பது கவியாகும்.

உள்ளும் புறமும் சேர்ந்தழகாய்
உயரும் கருத்தை அளிப்பதுவும்
கள்ளத் தனங்கள் நீக்குவதும்
காணும் மெய்ப்பொருள் காட்டுவதும்
தெள்ளத் தெளிந்த நடையினிலே
தித்தித் திருக்கும் சொல்லெடுத்து
அள்ளப் பெருகும் அமுதூற்றாய்
ஆண்மை வளர்ப்பது கவியாகும்.

படிப்பகம்

www.padippakam.com

நெல்லை சு.முத்து

# கண்ணதாசனின் இயேசுகாவியம்



"நாளை ஏசு கிறிஸ்து பிறந்த நாள். இன்னும் சீக்கிரமாகவே மாதா கோயிலைத் திறந்து விடுவார்கள். அதற்காகவே இங்கே சருக்குமரம், வேடிக்கைகள், தெருக்கூத்து, சர்க்கஸ் எல்லாம் வரப் போகிறது. நாளை ராத்திரி எல்லாம் பார்க்க வரலாம். இதுவும் நம்முடையதாகவேபாவிக்கலாம்." (ஆ. ஜி. ரங்கநாயகி, "பாரதியார் இல்லற நாடகம்").

கண்ணனைப் பற்பல தோற்றங்களில் ஆவகித்துப் பாடிய மகாகவி பாரதி புதுச்சேரியில் வாழ்ந்த கால கட்டத்தில் கூறின இதுபோன்ற பல சந்தர்ப்பங்கள் உண்டு.

அவரே ஏசு காவியம் பாட வேண்டும் என்று கூட விருப்பம் தெரிவித்ததாகச் சொல்லுவார்கள்.

இத்தகையோர் எண்ணம் ஈடேறியது கவியரசு கண்ணதாசனுக்கு மட்டுமே.

ஒரு சில திறனாய்வுகளின் படி கிறிஸ்துவையும், கிருஷ்ணனையும் ஒப்பு நோக்கியே பலவுரைக்கப்படும். இருவர் பிறப்பின் போதும் விசேட விண்மீன்கள் வானில் தோன்றின. பிறந்து இரண்டு வயதுக்குள்ளாகவே கொலை செய்யப்பட முறையே கம்சனால், ஏரோது மன்னனால் கட்டளை பிறக்கிறது. ஒரு பருக்கைச் சோறுண்டு பல முனிவர் வயிறார நிறைவது கண்ணன் விளையாட்டானால், ஐந்தே அப்பங்களை ஐயாயிரமாக்கிய அற்புதம் தேவ மைந்தனுடையது ஆகிறது.

தவிர இருவருமே ஆயர்கள்; ஆட்டிடையர்கள்; தர்க்க சாஸ்திர வல்லவர்கள். வசுதேவருக்கு யமுனை வழிந்து வழிவிடுகிற காட்சியும், மோயீசனுக்கு செங்கடல் பிளந்து வழிவிடச் செய்யும் தரிசனமும் இருவர் வரலாற்றிலும் பொது.

இப்படியே நீட்டிக் கொண்டே போய், கல்வாரி மலையின் கல்லறையுள் அடக்கம் செய்யப்பட்ட ஏகபிரான் மூன்றாம்நாள் உயிர்த்தெழுந்து பாரதத்தின் காஷ்மீர் வரை வந்ததாகவும், ஈசாநர் எனப்படும் கண்ணனும், ஏசுநாதரும் ஒருவரே என்கிற ஓர் புள்ளியில் போய் முடிப்பர் சிலர்.

எது எப்படியோ, 'இறை பக்தி என்கிற விசுவாசம் ஆன்மீக நெறி காட்டும்' எனும் மறை பொருளுக்கேற்ப எல்லா வேதங்

படிப்பகம்

www.padippakam.com

கனிலும் தத்துவம் ஒன்றே என்பதனை மானுடம் உணர்ந்தால் உலகில் எழாது போர்த் தொல்லை. இந்த அடிப்படையினைப் பரந்தாமன் பக்தனான கண்ணதாசனால் பாடுவிக்கப்பட்ட 'இயேசு காவியத்தின் மூலம் எடுத்து விளம்புவது இக்கட்டுரை நோக்கம்.

## வேத ஒற்றுமை:

"உன் தந்தையையும் தாயையும் மதித்து நடப்பாயாக! கொலை செய்யாதிருப்பாயாக! விபச்சாரம் செய்யாதிருப்பாயாக! களவு செய்யாதிருப்பாயாக! உன் அயலானுக்கு விரோதமாய் பொய் சொல்லாதிருப்பாயாக! உன் அயலான் வீட்டை விரும்பாதே; அவனுடைய மனைவியையாவது, வேலைக்காரனையாவது, வேலைக்காரியையாவது, மாட்டையாவது, கழுதையையாவது, மேலும் அவனுக்குக் கிடைத்த யாதொன்றையாவது விரும்பாதிருப்பாயாக" (யாத்திராகமம், வசனம் 12 - 16). இது பரிசுத்த வேதாகமம் (பழைய ஏற்பாடு).

பாரதி கூறுவது போல, "முக்கால்வாசி வேதத்தில் கோரிக்கைகள்தாம் அதிகம். 'ராட்சஸர்களை அழியுங்கள்!', 'நோய்களை ஒழித்துக் காப்பாற்றுங்கள்!', 'குழந்தைகளை நோய் அணுகாமல் காப்பாற்றுங்கள்', 'எங்கள் ஆசையை நிறைவேற்றுங்கள்!' 'தேசம் நன்றாகச் செழிக்கும்படி செய்யுங்கள்!', 'வருணா! இந்திரா! பயிர்களை ராட்சஸர்கள் அழிக்காமல் காப்பாய்!', 'வாயுவே! நீ கண் கண்ட தெய்வம்!' இந்தக் கூக்குரல் கோவை தான் வேதம். மகமதியர்களின் குர் - ஆனிலும் இப்படியே. 'குழந்தைகளை நல்வழியில் போகும்படி செய்!', 'அவர்களை வீரர்களாக ஆக்கு!', 'வயிற்றுக்கும் ஆணிக்கும் பஞ்சமில்லாமல் செய்!', 'எல்லோருடனும் தலையெடுத்து வாழும்படி செய்!', 'நல்ல தண்ணீர், நல்ல காற்று அமுதமாக நிரம்பும்படி செய்!' —இவையே குர் ஆனின் பொருள் பைபிளிலும் இஃதே. பாஷைகள் மாத்திரம் வெவ்வேறு" (யதுகிரி அம்மாள், பாரதி நினைவுகள் பக்51 - 52 ) என்கிற வேத ஒற்றுமையுணர்வு மானிட ஒருமைக்கு வழிவகுக்கும்.

இல்லையென்றாலும் இசுலாம், கிறித்தவம் இரண்டுமே ஓரே பண்ணில், பாரசீகம், எகிப்து, பாபிலோன் நிலப்பகுதிகளில் முகிழ்த்தவைதாமே! தாவூது - தாவீது; சுலைமான்- சாலமன்; யூசுப் - யோசேப் இப்படிச் சில பெயரொற்றுமைகள் உட்பட.

## பரமமமை:

எபிரேய மொழியிலோ இயேசுவே யோசுவா. 'கடவுளின் மீட்பு' என்பது பொருள்.

குற்றம் சாட்டப்பட்ட இயேசுவிடம் கைப்பாஸ் கின்டலாகக் கேட்டதைக் கண்ணதாசன் பாடுவது இப்படி:

படிப்பகம்

www.padippakam.com

''நிர்மல வானம் போல
நெடுநேரம் நின்றார் இயேசு!
வர்மத்தில் கைப்பாஸ் மீண்டும்
'மாபெரும் மீட்பர் நீயோ?
தர்மத்தின் தலைவன் நீயோ?
தலைவனின் பெயரில் ஆணை!
மர்மத்லை உடன் சொல்'
என்றான் ''

(இயேசு காவியம், பக்.341)

தேவனை நம்பினோர் மீளாத பரமபதம் எய்துவர் என்பதே திருமாலவன் வாக்கு: ''யத்கத்வா ந நிவர்த்தந்தே தத் தாம பரமம் மம'' (பகவத் கீதை, புருஷோத்தமயோகம்-6)

அவ்வாறே, ''புண்யோ கந்த: ப்ருதிவியாம் ச தேஜஜ்க் ஷாஸ்மி விபாவ ஸௌ! ஜீவ னம் சர்வபூதேஷ¬ தபக்ஷாஸ்மி தபஸ்விஷ¬ ||'' (கீதை, ஞான விஞ்ஞான யோகம் - 9) என் கிற கண்ணன் அருளுரைப்படி, 'மண்ணில் தூய மணமும், தீயில் ஒளியும் நான். எல்லா உயிர்களி லும் உயிர்ப்பு நான். தவஞ் செய்வோரின் தலம் நான்,' என்பது பரந்தாமனைச் சுட்டும்

''வானாகி மண்ணாகி
வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி
உண்மையுமாய் இன்மையுமாய்
கோனாகி...'' நின்ற ஈசுவரனைப் பாடும் மாணிக்க வாசகர் குரலும் இது. கண்ண தாசன் இசைக்கும் இயேசு மொழி இவ்வாறு -

''உயிரும் நானே
உயிர்ப்பும் நானே
என் மேல் அன்பை
என்றும் செலுத்துவோன்
வாழ்வது உண்மை
மரணம் இல்லை''

(இயேசு காவியம், பக். 253)

இதனைத்தானே பார்த்த சாரதியும் அர்ச்சுனனிடம் உப தேசித்தார், ''என்னை அடைந் தவர்க்கு, குந்திபுத்திரனே, மறு பிறப்பு இல்லை'' என்று!

(''மாம் உபேத்ய (து) கௌந்தேய புனர்ஜன்ம ந வித் யதே.'' கீதை, அக்ஷரப்ரஹ்ம யோகம் - 16)

## உளத்தால் உயிர்த்தெழு:

மறுபிறவி என்பது உடலால் இறந்து மீண்டும் பிறப்பதொன் றன்று. உள்ளத்தால் உயிர்த்தெ ழுதல். இதனையே இயேசு வாய் மொழியாக கண்ணதாசன் பாடும் வரிகள்:

''உயிர்த்தெழுந்தார் ஒருநாளும்
உடலாலே வாழ்வதில்லை''
''மானிடர்போல் வாழ்வதற்கு
மறுபடி ஏன் வரவேண்டும்?
ஊனுடலை மறந்துவிட்டு
உள்ளத்தைப் பாரும்''

(இயேசு காவியம் ,பக்.280)

''இறந்தோர் உயிர்த்தெழு வது குறித்து மோயீசன் ஆகமத் தில் முட்செடியைப் பற்றிய பகுதியில், 'நாம் ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள்' என்று கடவுள் அவருக்குக் கூறியதை நீங்கள் படித்ததில்லையா? அவர் வாழ்வோரின் கடவுளே அன்றி, இறந்தோரின் கடவுள் அல்லர். நீங்கள் பெரிதும் தவறி விட்டீர் கள்'' என்று இயேசு சதுசேய ரிடம் உரைக்கின்றார். ( புனித

படிப்பகம்

www.padippakam.com

மாற்கு எழுதிய சுவிசேஷம்)
''நாயகன் மீது
நம்பிக்கை இருந்தால்
அவரது மகிமை அறிவாய்''
(இயேசு காவியம் பக். 284)
என்கிறபடி தெய்வ நம்பிக்கை உடையவராய், பற்றற்றான் பற்றினைப் பற்றியவர் உலோகாயதப் பற்று விடல் வள்ளுவமறை. இதுவே கீதை வாக்கும் என்க.

''அஸக்திரன பிஷ்வங்க: புத்ர தார க்ருஹாதிஷு.'' இவ்வாறு மக்கள், மனையாள், மனை முதலியவற்றில் பற்றின்மை (கீதை, க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞ விபாகம் - 9)தானே
''தன்பெண்டு தன் பிள்ளை
சோறு வீடு
சம்பாத்யம் இவையுண்டு
தானுண் டென்பான்
சின்னதொரு கடுகு போல்
உள்ளங் கொண்டோன்
தெருவார்க்கும் பயனற்ற
சிறிய வீணன்.''
என்றும்,
''தூயஉள்ளம் அன்புள்ளம்
பெரிய உள்ளம்
தொல்லுலக மக்களெல்லாம்
'ஒன்றே' என்னும்
தாயுள்ளம் தனிலன்றோ
இன்பம்? அங்கே
சண்டையில்லை தன்னலந்தான்
தீர்ந்த தாலே''
என்றும், ''உலக ஒற்றுமை''க்கு வழிபாடுவார் புரட்சிக்கவி பாரதிதாசன்.

''மேலும் வீட்டையோ சகோதரர் சகோதரியையோ தாய் தந்தையையோ மக்களையோ நில புலங்களையோ என் பெயரின் பொருட்டுத் துறந்துவிடும் எவனும் பன்மடங்கு பெறுவான்; முடிவில்லாத வாழ்வும் பெற்று வாழ்வான்'' (புனித மத்தேயு எழுதிய சுவிசேஷம்) என்று விவிலியம் புதிய ஏற்பாடும் 'பற்றற்றவனுக்குப் பரிசு' வழங்குகின்றது.

## எண் குணம்:

''எளிய மனத்தோர் பேறு பெற்றார். ஏனெனில் விண்ணரசு அவர்களுடையதே'' (மத்தேயு) எனத் தொடங்கி நிகழ்த்திய இயேசுவின் மலைப் பொழிவினைக் கண்ணதாசன் தொடங்குவதும் இவ்வணமே.
''எளிய மனத்தோர்
பேறு பெற்றோரென
எடுத்ததும் அவர் சொன்னார்
-இதில்
எளிமை என்பது
பற்றில்லாமை
இறைவனை நம்புவதே.''
(இயேசு காவியம், பக். 94)

இந்த எளிய மனம், துயர் சகிப்பு, சாந்தமுடைமை, நீதியின்பால் தாகம், இரக்கமுடைமை, தூயஉள்ளம், அமைதியுள்ளம், நீதிக்காய் துன்பம் பொறுத்தல் ஆகிய குணங்கள் கொண்ட எட்டுவகை மனிதர்களை விவரமாக எடுத்துரைத்தார் இயேசு பிரான்.

திருவள்ளுவர் கூறும் இந்த ''எண்குணத்தான்'' தேவ அவதாரத்தினை - கடவுளைக் குறிப்பதானால், இயற்கை, சக்தி, பிரகிருதியே அதுவானால் கண்ணன் காட்டும் எட்டு வகைப்

www.padippakam.com

பிரிவுகளாவன: மண்(பூமி), நீர் (ஆப), தீ(அனல), காற்று(வாயு) ஆகாயம்(கம்), மனம்(மண), மதி (புத்தி) இவற்றுடன் எல்லா சேதன உயிர்களுக்கு முள்ள 'நான்' என்ற கொள்கையாகிய அஹங்காரம் (கீதை,ஞானயோகம், 4) ஆகியன.

## பிரம்ம எழுத்து:

"வேள்வி, தவம், தானம் இம்மூன்று கிரியைகளுமே 'ஓம்' என்ற மூல ஒலியில் தொடங்கிச் செய்யப்படும். "ஓம்" என்ற பிரம்ம எழுத்து ஒன்றையே உச்சரித்துக் கொண்டு என்னை முறைப்படி சிந்தித்தவனாய் உடலை எவன் துறக்கிறானோ அவனே பரமகதி அடைகின்றான்." (கீதை, அக்ஷரப்ரஹம யோகம்-13) என்கிற மாதவன் மறைமொழி கிறித்தவ வேதாகமத்திலும் உண்டு.

"விண்ணோடு மண்ணுலகம்
உள்ள மட்டும்
வேதங்கள் நிறைவேறும்
சட்டம் வாழும்
எந்நாளும் ஓரெழுத்தும்
பொய்யா காது
இது உண்மை இது உண்மை"
என்றார் இயேசு".

(இயேசு காவியம், பக்-98)

"என்னடியைப் பின்தொடர
என்ன செய்ய வேண்டும்?
உன்னடிகள் அத்தனையும்
ஒழித்துவிட வேண்டும்!
நின்னுடைமை அத்தனையும்
நீக்கிவிட வேண்டும்!
என்னுடைமை ஆனபின்னர்
வேறுடைமை என்ன?"

(இயேசு காவியம், பக்.121)

என்று தேவகுமாரன் வினவியதாகப் பாடுகிறார் கண்ணதாசன்.

கண்ணனின் கீதை 'ஓம்' என்ற மந்திரத்தில் தொடங்கும். இயேசுவின் அருளுரை 'ஆமென்' (அங்ஙனமே ஆகுக) என்று முடியும். எண் வகை நல்லெண்ணமும் தாரக எழுத்தும் எல்லாம் சுட்டிப் பாராட்டுவன வாஸுதேவ, ஏசுவே என்றதனால்தானோ என்னவோ, 'எண்ணும் எழுத்தும் எல்லாம் அவரே! இயேசுவை நம்புவோமே!' என்று தன் காவியத்தினை நிறைவு செய்கிறார் கவியரசர்? ○

---

## பாரதி வாக்கு:

உலக மக்கள் நன்மைக்காக மெய்வருத்தம் பாராமல் உழைப்பதே யோகம் எனப்படும். உலகம் நலம் பெற்று வாழ்வதற்குத் தன்னையே வருத்திக் கொள்ள நேர்ந்தால் அதுவே யாகம். போர்க்களத்தே பகைவரை எதிர்த்து நிற்கும் போது ஆத்திரம், அகங்காரம், ஆணவம் போன்ற உணர்வுகளால் மனதைப் பொங்கவிடாது, குலையாது நிற்கும் அமைதியே உண்மையான ஞானம் ஆகும்.

படிப்பகம்

www.padippakam.com

# பூஜ்யத்தில் பிரபஞ்சம்

இந்தப் பிரபஞ்சத்தில் நாம் வாழும் பூமி ஓர் அணுவுக் குச் சமமாகுமா? இருக்கலாம். 'வெளி' யெங்கும் எத்தனை எத்தனை கோடி விண்மீன்கள்! கிரகங்கள்! இதன் முடிவுதான் என்ன? பிரபஞ்சம் என்று நம் புலனுக்குள் உறைக்கக்கூடிய விஷயமே முடிவே இல்லாத அண்ட பகிரண்டத்தில் ஓர் அணு வாய் இருக்குமோ! அப்படியானால், நம் பூமி அந்த அணுவுக் குள் ஓர் அணு. அதில் வாழும் நாம்? அணுவுக்குள் அணு க்குள் ஓர் அணு. அவசரமில்லாமல், எண்ணத் தொடர் இழை நழுவி விடாமல், நிதானமாக நினைத்துப்பார்க்கவேண் டிய விஷயம் இது. இரவு நேரத்தில், மொட்டை மாடியில் மல் லாந்து படுத்துக்கொண்டு, நிர்மலமான வானத்தில் தெரியும் நட்சத்திரங்களினூடே, மனோ வேகத்தில் 'அடுத்து என்ன?' என்னும் கற்பனையோடு பிரயாணம் செய்து பாருங்கள். அப் பயணம் முடிவதே இல்லை. அதாவது இந்தப் பிரபஞ்சத்திற்கு எல்லையே இல்லை. இந்த எல்லையில்லாத அண்டத்தில் நாம் யார்? ஒன்றும் இல்லை. அதாவது ஒன்றுமில்லைக்குச் சமம். பூஜ்யம். அதாவது பூஜ்யத்திற்குச் சமம். முழுமையான பூஜ் யத்தை நம்மால் உணர முடியும் என்று தோன்றவில்லை. அதை உணர்ந்து கொள்வதுதான் மனிதப் பிறவியின் உச்ச பட்ச ஞானமாயிருக்கும் என்று தோன்றுகிறது. நம்மால் அனுமானிக்க முடிந்ததெல்லாம் பூஜ்யம் போன்ற, பூஜ்யத் திற்கு நெருக்கமான ஒன்றைத்தான். நாம் அப்படிப்பட்ட பூஜ்யங்கள். ஒவ்வொருவரும் ஒரு பூஜ்யம். மிகவும் சரி.

ஆனால், நாம்தானே இந்தப் பிரபஞ்சத்தையே கண்டு பிடித்திருக்கிறோம்! இந்த பூஜ்யத்திற்குள்ளே பிரபஞ்சத்திற் கப்பாலுக்கப்பாலும் தெரிகிறதே! எல்லையின்மையின் எல் லைக் கோட்டையே நிர்ணயம் பண்ண முடிகிறதே!

இப்போது எது பெரியது? இந்தப் பிரபஞ்சமா? இல்லை, பிரபஞ்சத்தையே விழுங்கிக்கொண்டிருக்கும் பூஜ்யமான நாமா?

சந்தேகமில்லாமல் நாம்தான். அடேயப்பா!

ஆனால் புரிந்துகொண்டிருக்கிறோமா?

புரிந்துகொண்டிருந்தால் இப்படிக் குருவி சுடுவதுபோல் சுட்டுக்கொண்டு மடிவோமா!

ஞானிகளாய் சிறக்க ஆசீர்வதிக்கப்பட்ட நாம் வெறி நாய் களாய் இருக்க சபித்துக் கொள்கிறோமே! என்ன நியாயம்?

படிப்பகம்

Kavithaasaran, April 1992 Regd. No. TN/MSN/746
CREATIVE LITERARY MONTHLY in TAMIL R. Dis. 5479/90
www.padippakam.com

# ADVERTISEMENT TARIFF

| | |
|---|---|
| Back Cover (Black & White) | Rs. 1250/- |
| Cover inside I & II each | ,, 1000/- |
| Full Print Page | ,, 750/- |
| Half Page | ,, 400/- |

Add 50 % for each additional colour upto 3 colours.

## MECHANICAL DATA

| | |
|---|---|
| Overall Size of the Monthly: | 21.5 cmX 14 cm |
| Print Area | 17.5 cm X 10.5 cm |
| Printing Process: | Letter Press |
| Material preferred: | Matter to be composed & Blocks |

**Your Advertisement in our Monthly is one step forward to help spread Creative Literature in good harmony.**

**சந்தாதாரர் ஆகுங்கள்**
**சந்தாதாரர் ஆக்குங்கள்**

படிப்பகம்